17 DEC 1956

கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | நவம்பர், 1955 | படி—2

சமுதாய
ஆத்திச்சூடி

அறிவைப் பெருக்கு

ஆனந்தமாக வாழ்

இன்சொல் பழகு

ஈ, கொசு தொலைத்திடு

உழைப்பதே பெருமை

ஊர்ப்பணி விரும்பு

எழில்கலை கற்றிடு

ஏர், தொழில் வளர்த்திடு

ஐயம் விட்டொழி

ஒற்றுமை தழைக்க நில்

ஓர் குலம் என்றுணர்

ஔவைசொல் அமுதம்

சரித்திரக் கண்ணோட்டம்

ஸ்ரீ T. N. S. ராகவன், I.C.S.,
சென்னை ராஜ்ய அபிவிருத்திக் கமிஷனர்

[பாரத நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டன. 1951-ம் வருஷத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டம் உருவானபோது, அதை "வெறும் காகிதத் திட்டம்; தேர்தல் பிரசாரத் திட்டம்" என்றெல்லாம் எள்ளி நகையாடியவர் எத்தனையோ பேர்! "கனவு காணும் முறையில், கற்பனை வெறியோடு தீட்டப்பட்ட கவிதைத் திட்டம்" என்று நையாண்டி செய்தனர், பல பொருளாதார அறிஞர்கள். "இப்போது இருக்கின்ற நிர்வாக அமைப்பைக் கொண்டு, இதை நிறைவேற்ற முடியுமா?" என்று மலைத்து நின்றனர், அநேக நிர்வாக நிபுணர்கள். "இதை எப்படித் தான் நிறைவேற்றுகிறார்களோ, பார்ப்போம்," என்று கூர்ந்து கவனித்து வந்தனர், உலக நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்கள்.

கடந்த சுமார் நான்கு ஆண்டுகளில், இத் திட்டத்தின் சாதனைகளை, இந்திய நாடு கண் கூடாகக் கண்டு வருகிறது. ஏட்டில் மட்டுமல்ல; நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம், மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டு வருவதை மக்கள் பார்க்க முடிகிறது. முதலாவதாக, ரேஷன் தொல்லை நீங்கியது. வேண்டிய அளவு உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. கிராமங்களிலெல்லாம் நீர்ப்பாசனம், மின்சார விஸ்தரிப்பு, புதுமுறை விவசாயம், கல்வி, சுகாதார வசதிகள் முதலிய பல நன்மைகள் கொஞ்சங் கொஞ்சமாக ஏற்பட்டு, மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தி வருகின்றன. அதே சமயத்தில், நிர்வாகத் துறையிலே, பொதுஜனத் தொடர்பு அதிகமாகி, புதிய உற்சாகமும், சம்பிரதாயங்களும், உருவாகி வருகின்றன. உலக நாடுகள், பாரத நாட்டின் அதிசய முன்னேற்றத்தை வாயாரப் புகழ்கின்றன.

—ஆசிரியர்.]

அரசியல் அமைப்பு, பொருளாதாரக் கட்டுக்கோப்பு, சமுதாய வளர்ச்சி ஆகிய விஷயங்கள், ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாக சம்பந்தப்பட்டவை. இவற்றைப் பற்றி விரிவாக விளக்க வேண்டியது, ஆராய்ச்சியாளர் கடமை. சாதாரணமாக, கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் இவற்றைப்பற்றிய ஆராய்ச்சி நடைபெறுவது சகஜம். ஆனால், இப்போது எல்லோரும் ஓரளவு இவற்றைக் குறித்து அறிய வேண்டியது அவசியமாகிவிட்டது.

ஏனென்றால், இது ஜனநாயக யுகம். பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்தே, அரசாட்சி நடைபெறுகிறது. அரசாங்கமும், மக்களும் தம்தம் பொறுப் புணர்ந்து, கடமை செய்ய வேண்டியிருக்கிறது. ஜனநாயக முறை வளர்ச்சி பெறுவதற்கு, பொதுமக்கள் அரசாங்க விஷயங்களில் அதிக சிரத்தை காட்டவேண்டும். அரசாட்சி நடத்துவோருக்கு, அவ்வப்போது ஆலோசனை கூறும் பொறுப்பும் சந்தர்ப்பமும், பொதுமக்களுக்குக் கிடைத்

துள்ளன. இந்தப் பெரிய பொறுப்பையும், அரிய சந்தர்ப்பத்தையும் சரிவரப் பயன்படுத்த வேண்டுமானால், அடிப்படையான சில விஷயங்களைப் பொதுமக்கள் நன்றாக அறிய வேண்டும்.

பழங்கால நிலை

மிகப் பழைய காலத்தில், நம் நாட்டில் போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைவு. இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருந்தன. ஜனத்தொகை, இப்போது இருப்பதைவிட, மிகக் குறைவாக இருந்தது. ஆகவே, அக்காலத்தில் சமுதாய அமைப்பிலும், பொருளாதார நிலையிலும் அதிக மாறுபாடுகள் ஏற்பட வழியில்லை. ஏதோ சில சமயங்களில் மழை சரியாகப் பெய்யாதபோது, உணவுப் பொருள்கள் உற்பத்தி குறைந்திருக்கும். அதன் பலனாக, சமுதாயத்தில் பொருளாதார நெருக்கடியும், சில கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டதுண்டு. கிராமாந்தரங்களில் இவை தவிர வேறு வகையான மாறுதல்கள் இருந்ததில்லை.

மேலும், "மாதம் மும்மாரி பெய்த" செய்தியை, பழைய இலக்கியங்களிலும், கர்ண பரம்பரைக் கதைகளிலும் நாம் கேட்டு வருகிறோம். அது மட்டுமல்லாமல், நம் நாட்டின் பண்பட்ட கலாசாரத்தின் விளைவாக, நம் கிராமவாசிகளிடையே பல சிறந்த குணங்கள் வேரூன்றியுள்ளன. தர்ம சிந்தனை, பரோபகார உணர்ச்சி, சேவை மனப்பான்மை, பொதுநல ஆர்வம் முதலியன பொதுமக்களிடம் குடிகொண்டிருந்தன. பருவநிலைக் கோளாறுகளால், சமுதாயத்தில் அவ்வப்போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, பெரும்பாலும் பொதுமக்களே தீர்த்துக்கொண்டனர். சில சமயங்களில் பஞ்சநிவாரணத்திற்காக, சில அரசர்கள் வரி வசூலை ரத்து செய்தனர். அத்துடன், கோயில் கட்டுதல், ஆற்றுக் கால்வாய் வெட்டுதல், ஏரி, குளம் நிர்மாணித்தல் முதலிய பொதுநல வேலைகளில் ஈடுபட்டனர். இந்த வேலைகளில் அநேகம் நம் கண் எதிரே இப்போதும் இருந்து வருகின்றன. நம் நாட்டின் பழைய பெருமைக்குரிய சின்னங்களாக, இவை விளங்குகின்றன.

சோழ, பாண்டியர் ஆட்சியில்

பொதுவாக ஆராய்ந்தால், பழங்காலத்தில் நம் நாட்டுக் கிராமாந்தரங்களில், அரசாங்கத்தின் நேரிடையான தலையீடு இருந்ததில்லை என்று தெரிகிறது. அயல்நாட்டு வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கிய காரணத்தால், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைமுகங்கள் உலகப் புகழ்பெற்று விளங்கின. பெரிய பட்டணங்களில் வாழ்ந்து வந்த மன்னர்களும், அவர்களின் அரசாட்சியும், அமைதி நிலை நாட்டும் பணியிலேயே பெரிதும் சிரத்தை காட்டி வந்தனர். உள்நாட்டுப் பிரதேசம் முழுவதையும் கிராமப் பஞ்சாயத்துக்களே நிர்வகித்தன. சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் கிராமப்பஞ்சாயத்துக்கள், எவ்வளவு சிறப்பான முறையில் சுய ஆட்சிப் பொறுப்புக்கும், சுய தேவைபூர்த்திக்கும், சுபிட்ச வாழ்வுக்கும் அடிகோலின என்பதை, பல சாசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. ஸ்ரீ K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் போன்ற அறிஞர்கள் எழுதியுள்ள ஆதாரபூர்வமான சரித்திர ஆராய்ச்சி நூல்கள், இவ்வுண்மையை மேலும் விரிவாகக் கூறும்.

அதே சமயத்தில், அரசாட்சியின் தலைநகரங்களாக விளங்கிய பட்டணங்களிலும், அரசாங்கப் படைத் தலைவர்களின் கேந்திர ஸ்தானங்களாக இருந்த பிரதேசங்களும், அரசியல் மாறுதல்களால் மிகவும் பாதிக்கப்பட்டன. அரசர்கள் தங்களுக்குள் அடிக்கடி யுத்தம் செய்ததின் காரணமாக, நாட்டில் அமைதி குலைந்து, பல கேடுகள் ஏற்பட்டதையும் சரித்திர நூல்கள் கூறுகின்றன. ஆயினும், அரசியல் மாறுதல்களால் அதிகம் பாதிக்கப்பட்டவை, நகரப் பிரதேசங்களே தவிர, உள்நாட்டிலிருந்த ஆயிரக்கணக்கான கிராமங்கள் அல்ல. ஏனெனில், கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம், வாழையடி வாழையாக வரும் சம்பிரதாயப் பழக்கப்படி, ஒழுங்காக நடைபெற்று வந்தது. அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரித்தொகையை அவர்கள் எப்போதும் செலுத்தத் தவறியதில்லை. அரசாங்க அதிகாரத்தில் யார் இருந்தாலும், அவர்களுக்கு ஒழுங்காக வரி செலுத்திவிட்டு, அமைதியாகக் காலங்கழித்தனர். அரசாட்சி பீடத்தில் இருந்தவர்களும், கிராமாந்தரப் பிரதேசங்களில் வரி வசூலிப்பதோடு, தம் காரியத்தை நிறுத்திக் கொண்டார்கள். சோழ, பாண்டிய ஆட்சிகளுக்குப்பின் ஏற்பட்ட விஜயநகர ஆட்சி, மராட்டிய ஆட்சி, முஸ்லிம் ஆட்சி முதலிய காலங்களில், ஏறக்குறைய இதே நிலைமை நீடித்திருந்தது என்று கூறலாம்.

பிரிட்டிஷ் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள்

பதினெட்டு, பத்தொன்பது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கும்பினி ஆட்சி (கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆட்சி) காலத்திலும், அதற்குப்பின் உருவான பிரிட்டிஷ் ஆட்சியிலும், சில மாறுதல்கள் ஏற்பட்டன. உலகெங்கும் தோன்றிய விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக நம் நாட்டின் பொருளாதாரத்துறையிலும் சமுதாயத்துறையிலும் புதிய சம்பிரதாயங்கள் தோன்றின. அரசாங்க அதிகாரிகள் கிராமாந்தரப் பிரதேசங்களில் தங்கியிருந்து, அவர்களின் கஷ்டசுகங்களைக் கண்டறிய வேண்டிய அவசியம் உண்டாயிற்று. அமைதியை நிலை நாட்டி, வரி வசூலிப்பதோடு, நீதியைப் பரிபாலிக்கும் பொறுப்பும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. எல்லா கிராமங்களுக்கும் பொதுவான சட்டம், அதை அமுல் நடத்தும் கோர்ட்டுகள், அவற்றை மேல்பார்வையிடும் கடமை முதலியவற்றை, அரசாங்கம் மேற்கொண்டது. கிராமங்களிலே பஞ்சம், தொத்துநோய் முதலிய கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டபோது, அரசாங்க அதிகாரிகளும் கிராம ஜனங்களும் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நிர்வாக அமைப்பு மிகவும் திறமையான முறையில் உருவாகி வளர்ந்தது.

1914-ம் ஆண்டில் நடைபெற்ற முதல் யுத்த காலத்தைவிட, சென்ற இரண்டாவது யுத்த காலத்தில், அரசாங்கத்தின் பொறுப்பும் தலையீடும் பன்மடங்கு அதிகரித்தன.

G.N.—1A

யுத்த நெருக்கடியினால், உணவு, உடை ஆகியவற்றை அளந்து பங்கிடும் அளவுக்கு, அரசாங்கம் செயலாற்ற வேண்டி நேரிட்டது. அப்போதுதான், நாம் உணவு விஷயத்தில், மற்ற நாட்டாரை எதிர்பார்த்து வாழ்வது எவ்வளவு அவமானம் என்பதை அறிய முடிந்தது. அதே நேரத்தில், கிராமவாசிகளின் வாழ்வில் அரசாங்கத் தலையீடு அளவுகடந்து சென்றுவிட்டது. அந்த அனுபவம் இனி எப்போதும் ஏற்பட முடியாது.

இவ்வாறாக, அரசாட்சியைப்பற்றி கவலை கொள்ளாமல் வாழ்ந்த கிராம ஜனங்கள், எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தையே நம்பி வாழவேண்டிய அளவுக்கு, சூழ்நிலை ஏற்பட்டது. அத்தகைய சமயத்தில்தான், உலக யுத்தம் முடிந்தது. பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்று, 1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 15உ சுதந்திர அரசாட்சி ஆரம்பமாகியது. மக்களின் கஷ்டங்களெல்லாம் ஒரேயடியாக நீங்கிவிடும் என்று யாவரும் எதிர்பார்க்கத் தொடங்கினர். எல்லாவற்றையும் அரசாங்கமே நிறைவேற்றிவிடும் என்று கிராமவாசிகள் உள்பட, யாவரும் எண்ணமிடலாயினர்.

குடியரசில் புதிய பொறுப்பு

பாரதநாட்டின் அரசியல் திட்டம் உருவாவதற்கு ஏறக்குறைய மூன்று வருஷங்கள் சென்றன. நம் நாட்டு மக்களின் ஆர்வம், அபிலாஷை, லட்சியம் ஆகியவற்றை வெளியிடும் வகையில், நம் சுதந்தர சாசனம் அமைந்தது. 1950-ம் ஆண்டு ஜனவரி 26உ முதல் நம் தேசத்தின் புதிய அரசியல் அமைப்பு—சுதந்தரக்குடியரசுத் திட்டம்—அமுல் நடக்கத் தொடங்கியது.

இந்த அரசியல் மாறுதலுக்கேற்ப, பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும் மகத்தான மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. சுதந்தர பாரதக்குடியரசின் பொருளாதாரக் கட்டுக்கோப்பில் ஏற்பட்ட முக்கிய மாறுதலின் ஓர் அம்சம்தான், ஐந்தாண்டுத் திட்டங்கள். சரித்திர ரீதியாக ஏற்பட்ட இந்த அரசியல் மாறுதல்களையும், அவற்றின் விளைவாக நாட்டு மக்களிடம் ஏற்பட்டு வந்துள்ள மனோபாவங்களையும் நன்றாக மனத்தில் கொண்டு, ஐந்தாண்டுத் திட்டங்களை ஆராயவேண்டும். அப்போதுதான், அவற்றிலுள்ள நுட்பங்கள் தெரியவரும்.

"சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும்" என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. சித்திரம் எழுத, சுவர் வேண்டியதுதான். ஆனால், அதற்கு முன்னே, மற்றொரு எச்சரிக்கை அவசியம். அதாவது, சுவர் எழுப்புவதற்கு முன்னே, அதன் அஸ்திவாரம் பலமாக அமையவேண்டும். இல்லையானால், சுவர் வைத்த முயற்சி, சித்திரம் தீட்டிய கலை அழகு எல்லாம் வீணாகி விடும். இதை நன்கு உணர்ந்தவர் நம் பிரதம மந்திரி நேருஜி. நம் நாட்டின் பண்பாட்டிற்கே உரிய முறையில் சாத்வீக மார்க்கத்தில் அரசியல் துறையில் மாறுதல் ஏற்படுத்தியதைப் போலவே, பொருளாதாரத் துறையிலும், அமைதியான வகையில் அமையும் திட்டங்கள்மூலம் மக்கள் சுபிட்சவாழ்வு பெறலாம் என்பதை, செயலளவில் காட்டி வருகிறார்.

நம் பண்பாட்டின் அடிப்படையில் உருவாகும் திட்டம்

நம் நாட்டிற்கே உரிய பழைய சிறந்த பண்பாடு என்னும் அஸ்திவாரத்தின்மீதுதான், நம் பொருளாதார சுபிட்ச மாளிகை நிர்மாணமாக வேண்டும். நம் பொருளாதாரத் திட்டங்கள், மற்ற நாடுகளைக் கண்டு, கண்மூடித்தனமாகப் பின்பற்றும் மனோபாவத்தால் உருவானவை அல்ல. நேருஜி இவ்வுண்மையை அடிக்கடி வற்புறுத்தி வருகிறார். 'ஐந்து வருஷம்' என்ற கால நிர்ணயத்தை, மற்ற நாடுகளும் கையாண்டுள்ளன. நிர்வாக வசதிக்காக, அதே கால நிர்ணயத்தை நாமும் மேற்கொண்டிருப்பதில் தவறில்லை. ஆனால், திட்டமிடும் முறை முழுவதும், நம் நாட்டுக்கே உரியது என்பதில் சந்தேகமில்லை.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே எழுதப்பட்ட திருக்குறளில்,

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று கூறுகிறார், அரசியல் ஞானி திருவள்ளுவர். அரசாங்கத்தின் கடமைகள் என்ன என்பதை விளக்கும் சூத்திரம் இது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும், வருமானத்தை வசூலிக்க வேண்டும், அவ்வாறு சேர்த்த அரசாங்க நிதியை எச்சரிக்கையோடு பாதுகாக்கவேண்டும், பொக்கிஷத்திலுள்ளதை மக்களின் நலனுக்கான சேவைகளுக்காகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். இவையே, அரசாங்க நிதி நிர்வாகத்தின் அடிப்படையான அம்சங்கள்; பொருளாதாரத் திட்டத்தின் ஜீவநாடியான கொள்கைகள். மிகப் பழங்காலத்திலேயே இந்த அடிப்படைத் தத்துவங்களை நம் பெரியோர்கள் நன்கு அறிந்து, நமக்கு அறிவித்துச் சென்றனர். இடைக் காலத்தில் அரசாங்கமும் மக்களும் அவற்றை மறக்கும் நிலைமை ஏற்பட்டது. மீண்டும், நம் சிறந்த பழங்கொள்கைகளை நடைமுறையில் கொண்டுவர, இப்போது முயன்று வருகிறோம்.

1951-ம் ஆண்டு உருவான முதல் ஐந்தாண்டுத் திட்டம், அப்போதிருந்த உணவுப் பற்றாக்குறையை நீக்குவதில் முக்கிய கவனம் செலுத்தியது. உணவுப் பொருள்களை அதிகப்படுத்தவும், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, விவசாயத்தைத் தீவிரப்படுத்தவும் அநேக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இப்போது உருவாகும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கைத்தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. கிராம அபிவிருத்தி வேலைகளை நாடெங்கும் விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறப்பாக, கிராமக் கைத்தொழில்களைப் போற்றி வளர்ப்பதற்கான திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

காற்றிலே மிதந்த கவிதை

நம் கிராம வாசிகள் ரசிகத் தன்மை நிறைந்தவர்கள். அதற்குச் சரியான அத்தாட்சி வேண்டுவோர், கிராமியப் பாடல்களை ஓரளவு கேட்டால் போதும். இயற்கைச் சூழ்நிலையில் வாழும் மக்களின் பல்வேறு உணர்ச்சிகள், அவற்றில் கலையுருவம் பெற்று, கேட்போர் மனத்தை அள்ளும் சக்தியுடன் விளங்குகின்றன. கிராமவாசிகள் பலர் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அனுபவ அறிவு முதிர்ச்சியின் காரணமாக, நாட்டுப்புற மக்களிடையே அநேக பாடல்கள் வழங்கிவருகின்றன. அந்தப் பாடல்களில் உள்ள அழகும், கற்பனையும், இசைக் கட்டும், சிறந்த கவிதைகளோடு போட்டியிடத்தக்க முறையில் உள்ளன. இந்த உண்மையை அறிஞர்கள் பலர் ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனால், அவற்றில் பல எழுதப்படாமலே உள்ளன. அவற்றின் ஆசிரியர்கள் யார் என்பதும் தெரியவில்லை. ஆகவே, நாட்டுப்புறப் பாடல்களுக்கு "காற்றிலே மிதந்த கவிதை" என்று மிகப் பொருத்தமாக ஒரு ரசிகர் பெயரிட்டார்.

கிராமாந்தரங்களில் வழங்கும் இத்தகைய பாடல்களை, அவ்வப்போது 'கிராம நல'த்தில் வெளியிட முடிவு செய்திருக்கிறோம். நாட்டுப் புறங்களில் பாடப்படும் கவர்ச்சிமிக்க பாடல்களை எழுதியனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். முக்கியமாக, கிராமப் பொதுநலப் பணிகள் சம்பந்தமாக இருக்கலாம். ஆனால் ஓர் எச்சரிக்கை. இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும், வானொலியிலும் இது வரை வெளியாகாத பாட்டுகளாக இருக்கவேண்டும்.

எழுத்தறிவில்லாத போதே, கிராம மக்களிடம் சிறந்த பாடல்கள் பிறந்திருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் எழுதப் படிக்கவும் தெரிந்துகொண்டால், பொன் மலர் வாசனையும் பெறுவது போல், மிகுந்த சிறப்பு உண்டாகும். இந்த லட்சியத்தோடு, நாடெங்கும் முதியோர் கல்விக்கான ஏற்பாடுகளை அரசினர் செய்துள்ளனர். சிறப்பாக தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத் திட்டம் ஆகியவை நடைபெறும் வட்டாரங்களில் இரவுப் பாடசாலைகள் அநேகம் தொடங்கப்பட்டுள்ளன. கல்வி இலாகா ஆதரவின் கீழ், சமூகக் கல்வி அமைப்பாளர்கள் அவற்றை அடிக்கடி மேற்பார்வையிட்டு, நல்ல முறையில் இயங்க உதவி செய்து வருகின்றனர்.

முதியோர் கல்விக்கான இரவுப் பாடசாலைகளில், எழுத்தறிவோடு, பாட்டு, கதை மூலம் கிராம வாசிகளுக்குத் தேவையான பொது அறிவு, புகட்டப்படுகிறது. படிப்பதற்கு வேண்டிய பலகை, புத்தகம், விளக்கு முதலிய சாதனங்களையும் அரசாங்கம் அளித்துள்ளது. முதியோர் கல்வி இயக்கம் சென்ற சில ஆண்டுகளாக நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. பல அரிய நூல்களும் புதிய பாடல்களும் உருவாகி நூற்றுக் கணக்கான கிராமங்களில் பரவி வருகின்றன. கல்வியின் அவசியத்தை விளக்கும் கருத்துக்களை, மிக எளிய நடையில், கிராமிய மெட்டுகளிலே, நயம்பட எடுத்துக்கூறும் ஒரு சில பாடல்களை, கீழே காணலாம்.—ஆசிரியர்]

எல்லோருக்கும் கல்வி

(கட்டபொம்மு—என்ற இசை.)

தலையாரிக் காத்தானே இங்கேவாடா—ஒரு
சங்கதி சொல்கிறேன் கேட்டுப்போடா.

இலைப்போட்டு பரிமாறும் கல்வியடா—இதை
எடுத்துண்ண மாட்டாயோ சொல்வாயடா.

நேற்றுப் பிரசங்கம் கேட்டிருப்பே—அதை
நினைவிலே இன்னுமா வைச்சிருப்பே.

ஏற்றதைக் கொஞ்சம் யோசித்துப்பாரு—உன்
இனத்தாருக் கெல்லாம் எடுத்துக்கூறு.

பாடுபடும் ஏழைமக்களுக்கு—இப்போ
படிக்க வசதி உண்டாயிருக்கு

நாடு புகழும் நமது சர்க்கார்—உனக்கு
நன்மை செய்திருப்பதை நீ எண்ணிப்பார்.

கோவில் பிரவேசம் அனுமதித்து—நீ
குடித்துக் கெடாமலே தடை விதித்து

பூவில் உனை மேலும் காப்பதற்கு—நல்ல
புதுக் கல்வி முறையையும் தந்திருக்கு

ஏற்றுக்கொள்வாயதை இப்பொழுதே—உன்
இழிவையெல்லாம் நீக்கும் சமயமிதே

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளு—அந்த
கல்லாமை பேய் விழச் சுட்டுத்தள்ளு.

(24-ம் பக்கம் பார்க்க)

“ எல்லோரும் கதராடை அணியுங்கள் ”

“ உங்களுக்கும், உங்களுடைய மேற்பார்வையின் கீழ் அலுவல்புரியும் அனைவருக்கும் நான் கீழ்க்கண்ட வாறு வேண்டுகோள்விடுக்க விரும்புகிறேன். எந்த உள்ளக் கிளர்ச்சியுடன் இவ்வேண்டுகோளை விடுக்கிறேனே அது உங்கள் உள்ளத்திலும் புகுந்து, நான் விரும்பும் மாறுதலையுண்டாக்குமென நினைக்கிறேன் .” என்று, கிராம நல டைரக்டர், ஸ்ரீ G. வேங்கடாசலபதி, 1955, செப்டெம்பர் 27-ந் தேதியன்று, தமது சக ஊழியர்களுக்கு விடுத்த அறிக்கையில் கூறியிருக்கிறார். மேலும், அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது :—

“ நமது தேச பிதா மகாத்மா காந்தி அண்ணலின் பிறந்த நாளை, வழக்கம் போல், அக்டோபர் 2-ந் தேதி யன்று, நம் நாட்டு மக்கள் கொண்டாடுவார்கள். காந்தி அண்ணல் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததை அநேகர் அத்தினத்தன்று நினைந்து அவருக்கு அஞ்சலி செய்வார்கள். கிராமிய இந்தியாவைப் புதுப்பித்து உரு வாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமக்கு, இத்தினம் விசேஷ முக்கியத்துவமுள்ளதாக விளங்குகிறது. இந்நாட்டில் வாழ்ந்துவரும் கோடிக் கணக்கான பாமர மக்களின், முக்கியமாக கிராமாந்தரங்களில் வாழும் பாமர மக்களின் நலனுக்காக, காந்தி அண்ணல் தமது வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கிறார். கிராம மக்களின் வாழ்க்கையிலே புதியதொரு உற்சாகத்தை உண்டாக்கி, அவர்கள் புது வாழ்வு பெறச் செய்வதற்கென்றே, போக்குவரத்து வசதி யில்லாமல் எங்கோ ஓரிடத்தில் இருந்த கிராமத்தில் அவர் வாழ்ந்துவர விரும்பினார். காந்தி அண்ணலின் வாழ்க்கையையும் அவருடைய உபதேசங்களையும் நாம் நன் கறிந்து, சீரிய கொள்கையைப் பரப்ப, நமது வாழ்க்கையை அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

சர்க்கா ஜெயந்தி

இந்நாளை, “ சர்க்கா ஜெயந்தி தினம் ” என்று கொண்டாட வேண்டுமென, காந்தி அண்ணல் விரும்பினார். அவருடைய விருப்பப்படியே முன்பும், இப்போதும், இத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. கதராடையில்லாமல் கிராமிய இந்தியாவைப் புதுப்பாணியில் உருவாக்க முடியாது என்பதை, அவர் நன்குணர்ந்தார். வேலையின்மைப் பிரச்னையைப் பெருமளவில் தீர்க்கக்கூடியது, கிராமாந்தரங் களில் கதர் நூலை நூற்பதும், கதராடை நெய்வதும் தான். விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு ஓரளவு வேலை தரும் வாய்ப்பை அளிப்பவை, ராட்டினமும், கைத்தறியும்.

குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, மக்கள் வளர்ச்சி ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிக்காமல், வேலை தரும் வாய்ப்பை அளிக்கும் சக்திவாய்ந்தது கதர் தொழில் என் பதை, பழமையில் பற்றுள்ள பொருளாதார நிபுணர்கள் கூட ஒப்புக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். கதர் உற்பத்தி யைப் பெருக்கி, அத்தொழில் வளம் ஓங்கச் செய்வதன் அவசியம்பற்றி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

ஏழ்மை, அறியாமை, உடல் நலக் குறைவு ஆகியவை கிராமவாசிகளைப் பீடிக்காதிருப்பதற்காக, அவர்களுக்கு உதவிபுரியவதில் ஆர்வம்கொண்டுள்ளவர்கள் நாம். கிராம வாசி பொருளாதாரத் துறையில் சுதந்தரத்தையும், பொது வாழ்வில் சமூக நீதியையும் பெற்று, தன்னம்பிக்கை யுடன் வாழ்க்கை நடத்தவேண்டுமென்று நாம் விரும்பு கிறோம். கதராடையை ‘ சுதந்தர அணி ’ என்று நமது பிரதம மந்திரி கூறியிருக்கிறார். நாம் பெற்றுள்ள சுதந்தரத்தை இழக்காது, லட்சக்கணக்கில் உள்ள பாமரர் களும் சுதந்தரமாக வாழ்ந்து வருவதில் நாம் அக்கறை கொண்டுள்ளோமானல், நாம் இன்றும்—என்றும்—சுதந் தர அணியாகத் திகழும் கதராடையை உடுத்தவேண்டும்.

சுதந்தர அணி

ஆக்கவேலையில் ஈடுபடும் தொண்டரின் அணியாகத் திகழும் கதராடையை முழு மனதுடன் நீங்கள் ஏற்று, பெருமிதத்துடன் அணிந்து கொள்ளவேண்டுமென்று நான் உங்கள் மேல் கொண்டுள்ள அன்புப் பிணைப்பின் பேரால் வேண்டிக் கொள்கிறேன். நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ராணுவத்தினருக்கு பிரத்தியேக உடைகள் உண்டு. அவர்கள் எந்தெந்த ஆடையை உடுத்திக் கொள்ளவேண்டுமென்பதும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், நம் நாட்டிலே, ஆக்க வேலையில் ஈடுபட்டுள்ள தொண்டர் உடுக்கவேண்டிய ஆடையை அத்தொண்டரே நன்குணர்ந்து தெரிந்தெடுத்துக்கொள்வதுதான் சிறந்தது. ஏதோ ஒரு கட்டளையைப் பிறப்பித்து, அதன் மூலம் நீங்கள் கதராடையை உடுத்துக்கொள்ளச் செய்வதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. ஒரு வேளை, அக்கட்டளை மூலம், சிறிது பலன் ஏற்படலாம். ஆனபோதிலும், அது திருப்தி யளிக்கக்கூடிய அளவில் இருக்காது. இஷ்ட பூர்வமாகவும் பரிவுடனும் கதராடை உடுத்துவதுதான், நமது செயல் களுக்கு உத்வேகத்தையளிக்கும் ; மேலும், நமது கடமையை, உயர்ந்த பண்புடனும் ஆத்மார்த்திக உணர்வு டனும் புரிவதற்கு, நமக்கு ஊக்கத்தையும் பலத்தையும் அளிக்கும்.

இப் புனிதத் திருநாளன்று—காந்தி ஜெயந்தி தினத் தன்று—தேச பிதா காந்தி அண்ணல் அருளிய உபதேசங் களுக் கிணங்க, கிராமிய இந்தியாவுக்குச் சேவைபுரிய நம் மையே அர்ப்பணித்து, இன்றும்—என்றுமே—கதராடை அணிந்து வருவோமாக.”

தமிழகத்தில் பிரதமர் நேரு

"பாரத தேசம் தலை நிமிர்ந்து நின்று சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள பிரும்மாண்டமான தொழிற்சாலைகள் அவசியம். புதுப்புது யந்திர நுட்பங்களைக் கண்டறிந்து அவற்றைக் கையாண்டாலொழிய நாம் நவீன உலகத்துக்குச் சமமாக நடைபோட முடியாது" என்று, பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, 1955, அக்டோபர் 2-ந் தேதி மாலை, பெரம்பூர் ரயில்பெட்டி தயாரிப்பு சாலையில் உற்பத்தியைத் துவக்கிவைக்கும்போது, கூறினார். இத் தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப் பெரியதாகத் திகழப்போகும் 'முழு உருக்கு—முழு இணைப்பு' ரயில்பெட்டி உற்பத்திசாலையாகும்.

சோஷலிஸ ஜனநாயக சமுதாயம்

பிரதமர் நேருஜி, அக்டோபர்மீ 3-ந் தேதி காலை சேலம் ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து பொதுக்கூட்டம் நடக்குமிடத்துக்குத் திறந்த காரில் நின்றுகொண்டு சென்றபோது ஐந்து மைல் நீள வழி நெடுகிலும் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மிகக் குதூகலத்துடன் அவரை வரவேற்றனர். "சோஷலிஸ ஜனநாயக சமுதாயத்தை உருவாக்க நாம் முயன்று வருகிறோம், வேறு எங்கும் இதை யாரும் முயற்சித்தது கிடையாது. சில இடங்களில் சோஷலிஸம் இருக்கும். மற்ற இடங்களில் ஜனநாயகம் இருக்கும். இவ்விரண்டும் சேர்ந்திருப்பதும் அபூர்வமே" என்று பிரதமர் ஸ்ரீ நேரு, பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். பொதுக்கூட்டம் முடிந்த பிறகு, அவர் திருச்சிக்குப் பயணமானார்.

திருச்சி செல்லும் வழியில் மல்லூரிலும் நாமக்கல்லிலும் அவருக்கு மாலைகள் போடப்பட்டன. ராசிபுரத்தில் கச்சேரி வீதி பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு நகர சபைத் தலைவர் ஸ்ரீ ஜி. கிருஷ்ணன், பிரதமர் ஸ்ரீ நேருவுக்கு மாலையிட்டு வரவேற்றார்.

கிராமத் தொழில்களுக்கு விசேஷ ஆதரவு

நாமக்கல், முசிறி, திருவானைக்காவல் வழியாக, பகல் 11-30-மணிக்கு பிரதமர் ஸ்ரீ நேரு திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார். வழி நெடுக மக்கள் திரளாகக்கூடி பிரதமரை வரவேற்றனர். சந்தனக் கட்டையால் செய்யப்பட்ட அழகிய வேலைப்பாடமைந்த விசிறி ஒன்று திருச்சிராப்பள்ளியில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகுமுன், ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. ஒரு ரேடியோ செட், நெட்டி கோபுரம், வெள்ளிச் செங்கோல் ஆகியவை பண்டிதர் நேருவுக்கு திருச்சிராப்பள்ளியின் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. "தென்னிந்தியாவில் இப்பகுதியில் ஏராளமான கைத்தறி நெசவாளர் இருக்கின்றனர். குறிப்பாக அவர்களுக்கு ஆதரவு கொடுக்க நாங்கள் விரும்புகிறோம். கைத்தறித் தொழில் மட்டுமல்ல. கிராமாந்தரத் தொழில்கள் பலவற்றையும் ஆதரிக்க விரும்புகிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமத் தொழில்களுக்கு விசேஷ ஆதரவு காட்ட விரும்புகிறோம்" என்று பிரதமர் நேருஜி அப்பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டம் முடிந்த பிறகு, சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு பிற்பகல் 3-மணிக்கு பிரதமர் ஸ்ரீ நேரு தஞ்சாவூருக்குப் புறப்பட்டார்.

ஒவ்வொரு கிராமத்திலும் அபிவிருத்தித் திட்டம்

தஞ்சாவூரில், பண்டித நேரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை ஓலைகளாலும், தோரணங்களாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிரதமர் ஸ்ரீ நேரு, மாலை 4·22-க்குத் தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், அவர் பேசும்போது, "சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறோம். இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் பாரத நாட்டின் தோற்றத்தையே மாற்றிவிடக்கூடியவை. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்தும் வேலையில் நாட்டில் உள்ள எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டு உழைக்கவேண்டும். இன்றைய உலகத்தில் சும்மா இருக்க நேரமில்லை, பிற நாடுகள் முன்னேறிக்கொண்டிருக்கும்போது நாம் பின்தங்கிவிடலாகாது" என்று வலியுறுத்தினார். இரவில் காரைக்கால் போய் சேர்ந்தார். அவர், மொத்தம் 175 மைல் பிரயாணம் செய்தார்.

சமூக பொருளாதாரத் துறைகளில் மாறுதல்

காரைக்காலில், அக்டோபர் 3-ந் தேதி இரவு நடைபெற்ற ஒரு மாபெரும் கூட்டத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ. நேரு "இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் சமாதான முறையில் ஏற்பட்டிருந்த போதிலும், அது முதல்தரமானதொரு புரட்சியாகும். ஆனால், அந்தப் புரட்சி இன்னும் முடிவடையவில்லை. அரசியல் துறையில் வேலை முடிந்துவிட்டது. ஆனால், சமூக, பொருளாதாரத்துறைகளில் தொடர்ந்து வேலை செய்யவேண்டியிருக்கிறது." என்று குறிப்பிட்டார். அக்டோபர் 4-ந் தேதி காலை, மாயூரம் வழியாக கடலூர் சென்றார்.

தேசியத் திருப்பணிகளில் மாதர்கள்

கடலூரில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ஸ்ரீ நேரு பேசுகையில், "இந்தியாவின் உண்மையான ஆத்மீக உணர்வை நன்கறிந்தவர்கள் மாதர்களேயாவர். எப்போதும் ஆணைவிட பெண்ணுக்குத்தான் இவ்வுணர்வு அதிகமாகும். எனவே, தேசிய வள திருப்பணிகளில் மாதர்கள் அதிகமாகக் கலந்துகொள்ளவேண்டுமென்று அழைக்கிறேன். வயல்களிலும், தொழிற்சாலைகளிலும், பெரிய தொழில் துறைகளிலும், குடிசைத் தொழில்களிலும், சமுதாய நலத்திட்டங்களிலும், தேசிய வளர்ச்சித் திட்டங்

களிலும் இதர அபிவிருத்தித் திட்டங்களிலும் நாமனைவரும் ஒரே மனதுடன் பணியாற்றினால், ஒவ்வொருவருக்கும் நல் வாய்ப்பு கிடைப்பது திண்ணம் '' என்று குறிப்பிட்டார்.

கடலூரிலிருந்து ஸ்ரீ நேரு புதுச்சேரிக்குச் சென்றார். சுற்றுப்பிரயாணத்தினால் அவர் சோர்வுற்றவராகக் காணப் படவில்லை. வெகு உற்சாகத்துடன் அவர் எல்லோருடனும் பழகினார். சர்க்கார் மாளிகையில் சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு கோரிமேட்டிற்கு சென்று, க்ஷய ரோக சானிடோரி யத்துக்கு அவர் அஸ்திவாரக்கல் நாட்டினார். பிறகு பிரெஞ்சு கழகத்தில் அளிக்கப்பட்ட விருந்தில் கலந்து கொண்டார்.

அபிவிருத்தித் திட்டங்கள் விஸ்தரிப்பு

புதுச்சேரி டெர்ரெயின் மிலிடெரி மைதானத்தில் நடை பெற்ற பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் பேசும் போது, பிரதம மந்திரி ஸ்ரீ நேரு, '' புதுச்சேரியில் ஒரு புது துறைமுகப்பாலம் கட்டுவதென்று முடிவு செய்திருக்கி றோம். இங்குள்ள மக்களுக்கு இன்னும் அதிக வேலை வாய்ப்புகள் கிடைக்கவேண்டு மென்பதற்காக புதுச்சேரியில் சில புது கைத் தொழில்களை ஆரம்பிப்பதென்று தீர்மானித் திருக்கிறோம். இங்கு ஏற்கெனவே நடைபெறும் சமுதாய நலத்திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய வற்றை விரிவுடுத்தவும் உத்தேசித்திருக்கிறோம் '' என்று அறிவித்தார்.

புதுச்சேரியிலிருந்து, அக்டோபர் 4-ந் தேதி இரவு 10–10-மணிக்கு, விசேஷ ரயிலில், பிரதம மந்திரி ஸ்ரீ நேரு, வேலூருக்குப் புறப்பட்டார்.

மாணவருக்கு விடுத்த வேண்டுகோள்

வேலூரில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ஸ்ரீ நேரு பேசும் போது, '' நவ இந்தியாவை உருவாக்கும் மாபெரும் திருப்பணியில் அவரவருடைய பங்கைச் செய்யுமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். இம் மகத்தான வேலையில் வெறும் எண்ணிக்கை மட்டும் கணக்கல்ல. சுறு சுறுப்பான கடின உழைப்புடன் தரமும் தன்மையும் சேர்ந் தால், இந்தியா வேகமாக வளர்வதற்குப் பெரிதும் உதவி யாக இருக்கும். இந்தியாவின் மாணவர் உலகுக்கு நான் தனிப்பட்ட வேண்டுகோள் விட விரும்புகிறேன். வருங் காலத்தில் இந்தியாவின் பொறுப்பை நன்கு நிறைவேற்று வதற்குத் தகுதி பெற இப்போதிருந்தே பயிற்சி பெற வேண்டும் '' எனக் குறிப்பிட்டார்.

பண்டித நேரு வட ஆற்காடு ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்கையில், சென்னை ரெவினியூ அமைச்சர் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேல் அவருடன் சென்றார். வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லா கிராமங்கள் வழியே நேருஜி பிரயாணம் செய்தபோது, பல இடங்களில் மக்கள் கூடிநின்று பிரதம மந்திரியை ஆரவாரத்துடன் வரவேற்ற னர். மேல்விஷாரம், ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜா பேட்டை, காவேரிப்பாக்கம், ஓட்டேரி ஆகிய இடங்களில் அளிக்கப்பட்ட வரவேற்பு குறிப்பிடத் தகுந்ததாகும்.

அரக்கோணம் தாலூகாவைச் சேர்ந்த ஓட்டேரி கிராமத் தில், பிரதம மந்திரியை வரவேற்க 10,000 பேர் அடங்கிய கூட்டம் கூடியிருந்தது.

அபிவிருத்தித் திட்டங்கள்....எனது புண்ய ஸ்தலங்கள்

'' காஞ்சீபுரம் முக்கியமான புண்ய ஸ்தலம். புகழ் பெற்ற பல அழகான ஆலயங்கள் இங்கு இருக்கின்றன. தரிசிக்க ஏராளமான மக்கள் இங்கு வருகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், தேச நலனுக்காக உழைக்கும் மக்களே எனது புண்ய ஸ்தலம். தேச நலனுக்காக மக்கள் உழைக்கும் ஸ்தலங்கள், மக்கள் உழைக்கும் பெரிய நதிப் பலநோக்குத் திட்டங்கள், தொழிற்சாலைகள், சமுதாய அபிவிருத்தித்திட்டங்கள் ஆகியவைகள் எனது புண்ய ஸ்தலங்கள். நமது கனவு நம் கண்ணெதிரே நனவா வதைக் காண்கிறோம். சிறந்த வழிபாடு, தேசத்தொண்டும் மனிதவர்க்கத் தொண்டுமே. ஆகவே, நவ இந்தியாவை சிருஷ்டிக்கின்ற திருப்பணியில் ஈடுபட உங்களை அழைக் கின்றேன் '' என்று பிரதமர் நேரு, காஞ்சிபுரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில், மக்களுக்கு வேண்டுகோள் விடுத் தார்.

பட்டுத் தொழிலுக்குப் பேர்பெற்ற காஞ்சி நகர பட்டு, சரிகை உற்பத்தியாளர் சங்கத்தினர் காந்தி தெருவில் நேருஜிக்கு வரவேற்பளித்தனர். அவர்கள் அழகிய பொன்னாடையை அவருக்குச் சமர்ப்பித்தனர். அசோக ஸ்தூபியும் தென்னாட்டு கோபுரங்களும் கொண்ட சரிகை வேலைப்பாடுடன் தயாரிக்கப்பட்ட அந்தப் பொன்னாடை பார்ப்பவர் மனதை மிகவும் கவர்ந்தது. சின்னகாஞ்சி புரத்தில், சகல ஆலய மரியாதைகளுடன், ஸ்ரீ தேவராஜ சாமி தேவஸ்தான தருமகர்த்தாக்கள், நேருஜிக்கு வரவேற் பளித்தனர். காஞ்சியிலிருந்து சென்னைக்கு வரும் வழி யில், சுங்குவார்சத்திரம், ஸ்ரீபெரும்பூதூர், பூவிருந்த வல்லி முதலிய இடங்களில், மக்கள் திரளாகக் கூடி பிரதமரை வரவேற்றனர்.

மனிதனின் சிந்தனை

பண்டித நேரு சென்னை திரும்பியதும், சென்னை விமான கிளப்பின் வெள்ளி விழாவில் கலந்துகொண்டார். அக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், அவர் குறிப்பிட்டதாவது :—'' மனிதன்தான் புது விஷயங் களையெல்லாம், கண்டுபிடிக்கிறான். ஆனால், பொதுவாக மனிதர்களுடைய சிந்தனை பின்தங்கியே நிற்கிறது. புதிது புதிதான விஞ்ஞான சாதனங்களை யெல்லாம் அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கிறோம். ஆனால், நம்முடைய சிந்தனை அந்த அளவுக்கு முன்னேறவில்லை.''

மலிவான புத்தகங்கள் பிரசுரம்

தென்னிந்திய மொழி நூல்கள் டிரஸ்டை பிரதம மந்திரி நேரு ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், '' நீங்கள் ஒருவரை வாசிக்கும்படி நிர்ப்பந்திக்க முடியாது. ஆனால் வாசிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த முடியும்.

அவர்கள் சுலபமாக வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளிக்கலாம். இதற்கு முதலாவதாக நல்ல மலிவான புத்தகங்கள் கிடைக்கும்படி செய்யலாம். நல்ல புத்தகங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும். அவை பொதுமக்களுக்கு அடக்க விலையில் விற்கப்படவேண்டும்." எனக் குறிப்பிட்டார். விழா முடிந்த பிறகு, ஸ்ரீ நேரு, சென்னை சங்கீத வித்வத் சபை விழாவில் கலந்துகொள்ள, சென்னை கவர்னருடன் சென்றார்.

கிராமியப் பாட்டுகளிலும், கிராமிய நடனங்களிலும் புத்துணர்ச்சி

சென்னை சங்கீத வித்வத் சபையின் புது கச்சேரி மண்டபத்திற்கு பிரதம மந்திரி ஸ்ரீ நேரு, அக்டோபர் 5-ந் தேதியன்று, அஸ்திவாரக்கல் நாட்டினார். அவ்விழாவில் அவர் பேசும்போது, "நாட்டின் வாழ்வில் சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகளுக்கு முக்கிய ஸ்தானம் உண்டு என்பதில் சந்தேகமே இல்லை. சென்ற சில வருஷங்களில், நாட்டியம், சங்கீதம் இரண்டிலும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள அக்கறை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சங்கீத ஞானம் உள்ளவர்கள் மட்டுமின்றி, கிராமாந்தரங்களில் உள்ளவர்களிடையேயும், சங்கீதம் நடனம் ஆகியவைகள் இருக்கின்றன. சாஸ்திரீய சங்கீதத்தைப் போல் கிராமியப் பாட்டுகள், கிராமிய நடனங்கள் ஆகியவைகளிலும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது" எனக் குறிப்பிட்டார்.

பிரதம மந்திரி ஸ்ரீ நேரு தம் புதல்வி இந்திரா காந்தியுடன், அக்டோபர் 6-ந் தேதி காலையில், சென்னையிலிருந்து விமானம் மூலம் பங்களூருக்குப் புறப்பட்டார். கவர்னருடன் விமான நிலையத்துக்கு வந்தடைந்த நேருஜி முக்கியஸ்தர்களுடனும் அதிகாரிகளுடனும் கை குலுக்கினார். நேருஜியை வழியனுப்ப, முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடாரும் மற்றும் இதர அமைச்சர்களும் அதிகாரிகளும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

செய்தித் திரட்டு

சென்னை அரசாங்க நிதி அமைச்சர், 1955-ம் ஆண்டு அக்டோபர் மீ 1-ந் தேதியன்று கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள கொழுமங்குளி பிர்க்காவில், தேசிய வளர்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினார். சுதந்தர ஆட்சி ஏற்பட்ட பின்பு கிராம நலனில் கருத்து செலுத்தப்பட்டு வசதிகள் செய்யப்படுகின்றனவென்றும் எடுத்துக் கூறிவிட்டு, அவர், அபிவிருத்தித்திட்டங்களைப் பற்றியும் மக்கள் ஒத்துழைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கினார். பின்னர், அவர், குண்டடம் பிர்க்காவிற்குச் சென்று, அங்கு, தேசிய வளர்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

* * * * *

அறவக்குறிச்சியில், சென்னை அரசாங்க அமைச்சர் ஸ்ரீ பரமேஸ்வரன், 1955-ம் ஆண்டு அக்டோபர் மீ 1-ந் தேதியன்று, தேசிய வளர்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ஒரு புதிய ரஸ்தாவையும் அவர் திறந்து வைத்தார்.

* * * * *

கடலூர், அக்டோபர், 5.

தென்னார்காடு ஜில்லா, செஞ்சி தாலுகாவிலுள்ள, மேல் மலையனூர்—சாத்தம்பட்டி பிர்க்காவில், தேசிய வளர்ச்சித் திட்டத்தை சென்னை அரசாங்க அமைச்சர் ஸ்ரீ எஸ். எஸ். ராமசாமி படையாச்சி ஆரம்பித்து வைத்தார். கிராம மக்களின் தேவையை கிராம மக்களே அறியமுடியும். ஆகவே, கிராம மக்கள், இத் திட்டத்தை முழு அளவும் பயன்படுத்திக்கொண்டு தங்கள் கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும்படி, அமைச்சர், மக்களைக் கேட்டுக்கொண்டார்.

* * * * *

திருநெல்வேலி ஜில்லாவில், வள்ளியூரில், காந்தி ஜெயந்தியன்று, தேசிய வளர்ச்சித் திட்டம், திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஸ்ரீ ஆர். வி. ராமன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

* * * * *

காந்தி கிராமத்தின் எட்டாவது ஆண்டுவிழா, அக்டோபர் மீ 7-ந் தேதி காலை 7-மணிக்குத் துவங்கியது. ஸ்ரீமதி அம்புஜம்மாள் அவர்களால் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இதை அடுத்து, ஆதாரக்கல்வி, சேவா கிராமம் குழந்தைகளின் விளையாட்டுவிழாக்கள் நடைபெற்றன. கண்காட்சித் திறப்புவிழா வைபவம், டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. காந்தி கிராமத்திலுள்ள மாணவ, மாணவிகளால் நடத்தப்படும் ஆநந்த பஜாரை, ஸ்ரீ ரவிந்திரன் திறந்து வைத்தார். காந்தி கிராம பிரார்த்தனை மைதானத்தில், மாலை 5-30 மணிக்கு, மாதர் கூட்டம் டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டி தலைமையில், நடைபெற்றது.

* * * * *

திருமங்கலம் வட்டார தேசிய வளர்ச்சித் திட்டத்தில், சித்திரெட்டிபாளையத்துக்குக் கிடைத்த அரசினர் பரிசைப் பெற்றுக்கொண்டு சென்னையிலிருந்து திரும்பி வந்த கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ எஸ். கந்தசாமி ரெட்டியாருக்கு, அந்தக் கிராமத்தில், 1955-ம் ஆண்டு அக்டோபர் மீ 4-ந் தேதியன்று மாலை 5-மணிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

* * * * *

கிராமத் தொண்டர்களின் திருப்பணி

(M. சற்குணம், உதவி காரியதரிசி, கிராம அபிவிருத்தித் திட்ட இலாகா)

கிராம அபிவிருத்திக் குரிய நிர்வாக அமைப்பில், கிராமத் தொண்டர் (சேவக்) மிக முக்கியமானதொரு இணைப்பாக விளங்குகிருர். இந் நிர்வாக அமைப்பு, கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களையுடையது.—1. கிராமவாசி தமது தேவைகளை நேரில் எடுத்துக்கூறி, தகுந்த உதவி பெறுவதற்கேற்றவகையில், ராஜ்ய நிர்வாக அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கிராமவாசிகளிடையே பழகி வரவேண்டும். 2. பிரத்தியேகத் துறைகளில் சேவையையும் ஆலோசனைகளையும் அளிப்பதற்குத் தகுந்தவாறு, கிராமங்கள் வட்டார அடிப்படையில் தொகுக்கப்படவேண்டும். 3. இவ் வட்டாரம், திட்டங்களை ஒருங்கு படுத்தி நிறைவேற்றக்கூடிய பொது அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படவேண்டும். 4. அவரவர் செய்யும் பணிகளுக்குகந்த பயிற்சியைத் தொண்டாற்றும் பலதரப்பட்ட சிப்பந்திகளனைவரும் பெற வேண்டும். ஏதோ இரண்டொரு பிரதான இடங்களிலிருந்துகொண்டு நிர்வாகத்தை நடத்தாமல், மக்களிடையே சென்று அவர்களுக்குச் சேவை புரியவேண்டும்.

கிராமத் தொண்டர்கள் நியமனம்

நிர்வாக அமைப்பில், புதிய இணைப்பாக இப்போது உருவாகி யிருப்பது கிராமத் தொண்டர்களின் நியமனமாகும். கிராமத் தொண்டர்களை நியமிப்பதால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறதென்பது அநுபவ பூர்வமாகக் கண்ட உண்மை. விவசாய இலாகாவில், (பீல்ட்மென்)கள் அதிகாரிகளாக வேலைபார்த்தவர்களில் பலர், கிராமத் தொண்டர்களாக நியமிக்கப் படுகின்றனர். இவர்கள், கிராமங்களில் விவசாய அபிவிருத்திக்காகப் பாடுபடுவதுடன், சுகாதாரம், கல்வி முதலிய துறைகளிலும், அபிவிருத்தி காணுவதற்காகப் பாடுபடவேண்டி யிருக்கிறது. பொது நலத் தொண்டில் ஈடுபட்டவர்களில் பலரும் கிராமத் தொண்டர்களாக நியமிக்கப்படுகின்றனர். சமூக சேவையில் இவர்களுக்கு நல்ல பயிற்சி இருப்பதுடன், மக்களிடம் எவ்வாறு அடுத்துப் பழகவேண்டும் என்பதிலும் நல்ல அனுபவமுண்டு. வேறு சிலரும்—அதாவது வேலையில்லாது, ஆனல் பத்தாவது வகுப்பு தேறியுள்ள சிலரும் கிராமத் தொண்டர்களாக நியமிக்கப் படுகின்றனர். இம்மாதிரி, விவசாய இலாகாவிலிருந்து வந்தவர்கள், சமூகத் தொண்டர்கள், பத்தாவது வகுப்பு தேறி, கிராமத் தொண்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஆகியோரனைவருக்கும், பிரத்தியேக பயிற்சி அளிக்கப்படுகிறது.

பஞ்சாயத்துக் கூட்டத்தில் கிராம சேவக் கலந்து கொள்கிருர்

கிராமத் தொண்டர், அபிவிருத்தி இலாகாக்கள் அனைத்துக்கும் பொதுவாக உள்ள ஊழியர்; பலவகைப் பட்ட அலுவல்களைக்கவனிப்பவர். விவசாயம், கால் நடை, கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகிய துறைகளுக்கென நியமிக்கப் பட்டிருக்கும் விஸ்தரிப்பு அதிகாரிகள் எந்தெந்த அலுவல்களைப் பார்க்கச் சொல்கிருர்களோ, அவற்றை யெல்லாம் கிராமத் தொண்டர் நிறைவேற்றவேண்டும். அத்துடன், அவர், சமூகக் கல்வி அமைப்பாளர்களுக்கும் ஒத்தாசையாகவிருக்கவேண்டும். அவர் நியமிக்கப்பட்டிருக்கும் கிராமத் தொகுதியிலுள்ள கிராம மொன்றிலேயே அவர் வாழ்ந்து வருவதுடன், அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் அவர் வழியாக நடந்து வருவதற்கேற்றபடி சேவை புரிய வேண்டும்.

கிராமத் தொண்டர்கள் புரியும் தொண்டு

கிராமவாசிகளுக்கு உண்மையிலேயே, மிகவும் உதவி புரிபவராக கிராமத் தொண்டர் விளங்கி வருவதுடன், ஸ்தல நிலைமை, தேவைகள், கஷ்டங்கள் ஆகியவற்றை நன்ருக அறிந்துகொள்ளவேண்டும். அபிவிருத்தி வேலைகள், அவர் மூலமாகவே நடைபெற விரும்பதால், கிராமவாசிகளுடன் எப்போதும் அவர் நெருங்கிப் பழகி, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருவது அவசியமாகும். யாதொரு நோக்கமுமில்லாது, ஒரு கிராமத்தைவிட்டு மற்ருெரு கிராமத்துக்குச் சென்றும், வீணுகக் கிராமங்கள் தோறும் சுற்றியும் நேரத்தை விரயமாக்குவதற்குப் பதிலாக, எந்த இடத்தில் அபிவிருத்தி வேலை நடக்கிறதோ, அங்கு சென்று அவ்வேலையைக் கவனிப்பது சாலவும் சிறந்ததாகும்.

கிராமத்தில் என்ன நிலைமை நிலவியுள்ளது, என்பதை நன்கறிந்து கொள்ளாவிட்டால், பயன்தரக்கூடிய வேலை எதையும் நிறைவேற்ற முடியாது. ஆகவே கிராம நிலைமையைப்பற்றிய விவரங்களை முன்னதாகவே சேகரித்துக் கொள்வது, கிராமத்திருப்பணிக்கு இன்றியமையாததாகும். ஒவ்வொரு கிராமத்திலும் நிலைமை எவ்வாறிருக்கிறது என்பது பற்றியும் கிராம வாசிகளின் பழக்க வழக்கங்களைப் பற்றியும், அவர்களுடைய மனோநிலை, உணர்ச்சி ஆகியவை பற்றியும் கிராமத்தொண்டர் முதன் முதலாக விவரங்கள் சேகரித்துக் கொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல. அவருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள வினாத்தாளில் கண்டுள்ள குறிப்புகளின்படி, புள்ளி விவரங்களையும் அவர் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

கிராமத் திட்டம்

அவர் தொண்டு புரிவதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் கிராமங்கள் ஒவ்வொன்றிலும், அவர் எந்தெந்த வகையில் பணிபுரிதல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்காக, வட்டார அபிவிருத்தி அதிகாரியின் யோசனைக்கிணங்க, விரிவான கிராமத்திட்டமொன்றை அவர் வகுக்க வேண்டும். இத்திட்டத்தை உத்தியோக பூர்வமாகச் சேகரிக்கப்பட்ட விவரங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்காமல் மக்களின் விருப்பம் யாது, அவர்களுக்குத் தேவைப்படுவது யாது என்பவற்றை மக்களிடமே கேட்டுத்தெரிந்து கொண்டு, அவற்றிற்கேற்றபடி வகுக்கவேண்டும்.

கிராமத்திலுள்ள குடும்பங்கள் அனைத்தையும் அவர் நன்கறிந்துகொண்டு அக் குடும்பத்தார்களின் தேவைகளையும் வசதிகளையும் அனுசரித்து, விவசாய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து, அக் குடும்பங்களுக்கு, அவற்றின்படி யோசனைகூறி, உதவிபுரிதல் வேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு குறிப்பு அட்டை வீதம், புள்ளி விவரங்கள் சேகரிப்பதற்காக அட்டைகள் எழுதி, அந்த அட்டைகளில் குடும்பத்தினர் எந்த வேலைத் திட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டனர் என்பதையும் குறித்து வைத்துக் கொள்வது நல்லது.

கிராமத் தொண்டர்கள் சிறந்த சேவைபுரிவதற்குக், கீழ்க் கண்டுள்ள குறிப்புகள் பிரயோசனமுள்ளவையாக இருக்கும்.

மக்கள் விரும்புவது யாது ?

ஒரு கிராமத்தில் எது மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது...அது ரஸ்தாவாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, அல்லது குடி தண்ணீர் கிணறாக இருந்தாலும் சரி...என்பதை உணர்ந்து கொள்வதே, அக் கிராமத்திலுள்ள மக்களிடம் நெருங்கி அந்நியோன்யமாகப் பழகுவதற்குச் சிறந்த வழியாகும். விவசாய உற்பத்திக்கான நல்ல பொறுக்கு விதைகள், சிறந்த உரம், திருந்திய விவசாய முறை ஆகியவற்றைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், மக்கள் அவற்றைக்கேட்கப் பெரிதும் விரும்புவதுண்டு. சில சமயங்களில், சுகாதாரத் திட்டங்களை எடுத்துக் கூறுவதும், மக்களுடன் நெருங்கிப் பழகுவதற்குத் தகுந்த வாய்ப்பை அளிக்கும்.

பொதுநலப்பணி சம்பந்தமாக, தனித்தனியாகக் கிராம வாசிகளைச் சந்திப்பதற்குப் பதிலாக, நாலைந்து பேர்களடங்கிய கூட்டத்தாரைச் சந்திப்பது நன்மை பயக்கும். சொல்லப்போனால், தனித்தனியாகச் சந்தித்துப் பேசுவது, தீங்கை விளைவிக்கும். ஏனெனில் இது தனிமையில் சந்தித்துப் பேசாத கிராமவாசிகள் கிராமத் தொண்டருடன் ஒத்துழைக்காதபடி செய்து விடும்.

கிராம வாசிகளின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. அதைப்பெற, சகல விதத்திலும் பாடுபட்டு வருவதுடன், அது மேலும் பெருகுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். பண உதவி செய்தும் நேரிடையாக பயிற்சி முறைகளைச் செய்து காட்டியும், கிராம வாசிகளின்

கிராம சேவக் கதர் உண்டி விற்பனையில் ஈடுபடுகிறார்

உற்சாகமும் ஊக்கமும் குன்றாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அபிவிருத்தி செய்வதற் கென்றே கிராமத்தில் தாம் இருப்பதை, கிராமத் தொண்டர் உணர்தல் வேண்டும். தாம் ஏற்றுள்ள பொறுப்பைச் சரிவர நிர்வகித்துச் சிறந்த சேவை புரிவதன் மூலம், மற்றவர்களுக்கு அவர் சிறந்ததொரு உதாரண ஊழியராகத் திகழவேண்டும்.

" முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல் "

—திருக்குறள்.

G.N.—3A

மாணிக்கசேரி பாலம்



வணிகம் செழிப்பதற்கு போக்குவரத்து பெருகவேண்டும். சாலைகளும், பாலங்களும் போக்கு வரத்துக்கு இன்றியமையாதவை. வணிகக் களங்களுக்கும் பயிர் விளையு மிடங்களுக்குமிடையே ஏதாவதொரு சிற்றாறோ கால்வாயோ குறுக்கிட்டுவிட்டால், விளைபொருள்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் பல மைல் தூரம் வளைந்து வளைந்து சென்று, தொலை தூரத்திலுள்ள பாலத்தின் உதவியால், அச்சிற்றாறையோ கால்வாயையோ கடந்து செல்வது வழக்கம். இதனால் கால தாமதமும் வீண் பணச்செலவும் ஏற்படுவதுண்டு. இம்மாதிரியான கஷ்டங்களைத் தவிர்க்க பயிர் விளையு மிடங்களுக்கும் வணிகக்களங்களுக்குமிடையே நேரிடையாக பாதைகளை அமைப்பதும், ஆறுகள், கால்வாய்கள் மீது பாலங்களை அமைப்பதும் அவசியமே......மாணிக்க சேரியிலுள்ள மக்கள் ஆறு அல்லது ஏழு மைல்கள் சுற்றுப் பாதைகளில் செல்வதைத் தவிர்க்க பாலமொன்று கட்டினார்கள்; சாலை ஒன்றையும் அமைத்தார்கள்.

ஹரி ஜனங்களுக்குப் புதிய வீடுகள்

மழை பெய்தால் ஒழுகக்கூடிய கூரை....காற்றோட்டத்துக்கு வழியில்லாதபடி தாழ்ந்து கட்டப்பட்டுள்ள மண் சுவர்.... இம்மாதிரி அமைந்துள்ள பழைய குடிசைகளுக்குப்பதிலாக, காற்றோட்டவசதியுள்ள சுத்தமான பக்கா வீடுகளைக் கட்டிக்கொடுக்க, அரசினர் முன் வந்துள்ளனர். கினவல்லூரில், மேலும் பத்து புது வீடுகளைக்கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வடக்கன் சேரியிலும் பல புதிய வீடுகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாதத்துக்கு நான்கு ரூபாய் வீதம் கொடுத்து, நாயாடி மக்கள் புது வீடுகளைத் தங்களுடையனவாக்கிக் கொள்ளலாம். இவ்வீடுகளின் அமைப்பு நிரந்தரமானது. திட்ட எஞ்சினீரிங் அதிகாரிகள் மேற்பார்வையில், இவ் வீடுகள் கட்டப்படுகின்றன. நாயாடிகளுக்காகக் கட்டப்படவிருக்கும் புது வீடுகள் காலனித் திட்டத்தை, 1955, செப்டம்பர்மீ 21-ந் தேதியன்று, சமுதாய அபிவிருத்தி டைரக்டர் ஸ்ரீ என்.இ.எஸ். ராகவாச்சாரி, ஐ.சி.எஸ்., ஆரம்பித்து வைத்தார். அந்த வைபவத்தைச் சித்தரிக்கிறது இப்படம்.

கிராமவாசிகளின் புதுமுறையான ஊர்வலம்

(ஸ்ரீ டி. சி. டுபே, ஸ்ரீ பி. எஸ். லாம்பா.)

[புதிய எண்ணங்கள் ஒரு சிலரைத்தான் விரைவில் கவரும். பழமையில் ஊறிப்போனவர்கள், புதிய கருத்துக்கள் எவ்வளவு சிறந்தவையாக இருந்தாலும், அவற்றை உடனடியாக விரும்புவதும் இல்லை ; ஏற்றுக் கொள்ளவும் தயங்குவார்கள். வேறு யாராவது அவற்றின் பலாபலன்களை அனுபவரீதியாக அறிந்த பிறகுதான், அவற்றைப் பின்பற்றுவதைக் குறித்து ஆலோசிப்பார்கள்.

நம் நாட்டு கிராம ஜனங்களில் பெரும்பாலோர் இத்தகைய குணம் படைத்தவர்களே. ஆதலால், அவர்களிடம் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி அரசாங்க அதிகாரிகள் அதிகம் பேசுவதைவிட, அவர்களே ஒருவருக்கொருவர் தம் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ள ஏற்பாடு செய்வதால், சிறந்த பலன் ஏற்படும். புதிய விவசாய முறைகள், கூட்டுறவு முயற்சி, சமூகக் கல்வி முதலியவற்றால் பயனடைந்த கிராமவாசிகள், மற்றவருக்குத் தம் அனுபவத்தை எடுத்துச் சொன்னால், அநேகருக்கு விழிப்பு உண்டாகி, மேலும் அதிக ஒத்துழைப்பு கிடைக்கும்.

" போபால் " என்பது வட இந்தியாவிலுள்ள ஒரு சிறு ராஜ்யம். அங்கே மேற்சொன்ன கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரசாரத் துறையில், இது ஒரு புதிய அம்சம் மட்டுமல்ல ; சிறந்த பலனளிக்கக்கூடிய அனுபவத் திட்டம். அதைப்பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது. நம் ராஜ்ய மக்கள் இதை எவ்வாறு வரவேற்பார்களோ !

—ஆசிரியர்]

சமுதாய நலத் திட்டம் மக்கள் திட்டமே யாகும். அது வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு, பொதுமக்கள் அத்திட்டத்தைப்பற்றி நன்கு உணரச் செய்து, அவர்கள் ஆதரவைப் பெறுவது இன்றியமையாதது. இந்நோக்கத்துடன், நாங்கள், போபாலிலுள்ள மூன்று சமுதாய நலத் திட்ட வட்டாரங்களிலிருக்கும் முன்னேற்றமடைந்துள்ள கிராமங்களில், வட்டாரத்துக்கு பத்து கிராமங்கள் வீதம் தேர்ந்தெடுத்தோம். அக்கிராமங்களில் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய கிராமவாசிகளில், கிராமம் ஒன்றுக்கு இரண்டு பேர் வீதம் தேர்ந்தெடுத்து, அவர்களை மாட்டுவண்டிகளில் சுற்றுப்பிரயாணம் செய்யச் சொன்னோம். சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக, அந்தந்த கிராமங்களில் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகள், அமைக்கப்பட்ட ரஸ்தாக்கள், வினியோகிக்கப்பட்ட விவசாயக் கருவிகள் போன்றவற்றைச் சித்தரிக்கும் பெரிய புகைப்படங்கள், இப்படங்களைப் பற்றிய புள்ளி விவரங்களை எடுத்துக்கூறும் வண்ணப் படங்கள், விளக்கப்படங்கள், ஸ்லைடுகள், சினிமா ஸ்லைட் காட்டும் கருவி ஆகியவை அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. மேலும் அக்கிராமவாசிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விளை பொருள்கள், தயாரிப்புப்பொருள்கள் ஆகியவையும், மாதிரிக்காக, சிறிதளவு எடுத்துச் செல்லப்பட்டன. கிராமவாசிகள், சிறந்த மாட்டுவண்டிகளைத் தேர்ந்தெடுத்து, அவைகளை அலங்காரம் செய்து, மேற்கூறிய படங்களையும் இதர பொருள்களையும் அவ்வண்டிகளில் ஏற்றிக்கொண்டு, சுற்றுப் பிரயாணம் செய்ய முற்பட்டனர்.

மூன்று ஊர்வலங்கள்

இவ்வாறாக, மூன்று சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலிருந்து மூன்று ஊர்வலங்கள் புறப்பட்டன. இந்த ஊர்வலங்களில், முன்னேற்றமடைந்த முப்பது கிராமங்கள் பங்கெடுத்துக்கொண்டன. முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாயுள்ள 60 பொறுப்புவாய்ந்த கிராமப் பிரதிநிதிகள் இந்த ஊர்வலங்களில் கலந்துகொண்டனர். இவர்கள், 30 மாட்டுவண்டிகளில், ஏழு நாட்கள்வரை, கிராமந்தோறும் சென்று, அக்கிராமங்களில் உள்ள மக்களுக்கு, சமுதாய நலத் திட்டங்களால் தங்கள் கிராமங்களில் ஏற்பட்டுள்ள நன்மைகளை எடுத்துக்கூறி, புகைப்படங்களையும், விளக்கப்படங்களையும் காண்பித்து, எந்தெந்த கிராமங்களில் ரஸ்தாக்கள் போடப்பட்டன, பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன, கிணறுகள் தோண்டப்பட்டன போன்ற விவரங்களை விளக்கிக் கூறினார்கள். இம்மாதிரி, கிராமவாசிகளே உற்சாகத்துடன், அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் கிட்டிய பலன்களை, மற்ற ஊர்களிலுள்ள மக்களுக்கு எடுத்துக் கூறியதால், திட்டங்களால் ஏற்படும் பலாபலன்கள் யாவை என்பது, இதர ஊர்களிலுள்ள மக்களின் மனதிலும் நன்றாகப் பதிந்துவிட்டது.

முப்பது மாட்டுவண்டிகளில் சென்ற அறுபது கிராம வாசிகள், மொத்தம் 83 கிராமங்களுக்கு விஜயம் செய்தனர். அக்கிராமங்களில் நடைபெற்ற மொத்தம் 60 பொதுக்கூட்டங்களில், இவர்கள் சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி விவரித்துப் பேசினர்கள். 83 கிராமங்களிலும், இவர்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. வரவேற்று உபசரித்த கிராமவாசிகள், விருந்தினரோடு நெருங்கிப் பழகி, சகல விஷயங்களைப்பற்றியும் ஒளிவுமறைவின்றிப் பேசி விவாதித்தனர். இம்மாதிரியான விவாதங்கள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகளாலோ அல்லது கிராம சேவக்குகளாலோ நடத்தப்பட்ட கிராமவாசிகள் கூட்டங்களில் நடைபெறவேயில்லை.

அமோக வரவேற்பு

சுற்றுப் பிரயாணம் செய்த கிராமவாசிகளை, அந்தந்த கிராமத்திலுள்ள மக்கள், கொட்டுமேளம் முழங்கி வரவேற்றது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கிராமத்திலுள்ள பெண்களோ, கிராமியப் பாடல்களைப் பாடி, அவர்களை வரவேற்று, திலகமிட்டு ஆரத்தி எடுத்தனர். விருந்தாளிகளுக்கு மாலைகள் போடப்பட்டு, சில இடங்களில்—மகாராஜாக்களுக்கு பீரங்கி வெடித்து வரவேற்பதுபோல்—ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிகளால் வெறுமனே சுட்டும், வரவேற்பு அளிக்கப்பட்டது. நெடுநேரம் கூட்டங்கள் நடைபெற்றன. விஷயங்களெல்லாம் அப்பட்டமாக எடுத்துக் கூறப்பட்டு விவாதிக்கப்பட்டன. திட்ட நிர்வாகத்தினரின் கொள்கைகளையும் கருத்துக்களையும் கிராமவாசிகளே எடுத்துக்கூறி, மற்ற கிராமவாசிகளையும் அவைகளுக்கு ஆதரவு அளிக்கச் செய்ததற்கு, இக் கூட்டங்கள் பெரிதும் பயன்பட்டன.

சுற்றுப் பிரயாணம் முடிந்ததும், இக் கிராமவாசிகளை நாங்கள் கிராம சேவக் பயிற்சி நிலையமொன்றிற்கு அழைத்துச் சென்றோம். அங்கு, திருந்திய விவசாய முறைகளை, அவர்களுக்கு விளக்கிக் கூறினோம். பிறகு விவாத அரங்கு நடைபெற்றது. அவர்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று, மேலும் எந்தெந்த அபிவிருத்தி வேலைகளைப் புரிவது என்பது பற்றி, விவாத அரங்கில் முடிவு செய்யப்பட்டது.

விவாத அரங்கில் நிறைவேறிய திட்டங்கள்

இம்மாதிரியான ஊர்வலங்களை வருஷத்திற்கு இரண்டு தடவையாவது—விதைப்பு நடந்து முடிந்ததும், அறுவடை நடந்த பிறகும்—நடத்தவேண்டுமென்று விவாத அரங்கில் சிபாரிசு செய்யப்பட்டது. தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களிலும், இம்மாதிரிப்பட்ட ஊர்வலங்களை அரசினர் நடத்தவேண்டுமென்றும் சிபாரிசு செய்யப்பட்டது. இம்மாதிரி ஊர்வலங்கள் செல்லும்போது, விவசாயக் கருவிகள், மாதிரிகள் போன்றவற்றையும், மாட்டுவண்டிகளில் எடுத்துச் சென்று, கிராமந்தோறும், பொருட்காட்சியையும் அமைத்து நடத்தவேண்டுமென்று கிராமவாசிகள் கூறினர்கள். சுற்றுப் பிரயாணத்திற்கு ஆறு நாட்களும், விவாத அரங்குக்கு இரண்டு நாட்களும், ஆக மொத்தம் எட்டு நாட்கள், இம்மாதிரிப்பட்ட ஊர்வலங்களை நடத்தப் போதுமென அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். முன்னேற்றத்தில் கண்ணுங்கருத்துமாயுள்ள கிராமவாசிகள் 6—10 பேர் கொண்ட சங்கங்களை, ஒவ்வொரு கிராமத்திலும், சுற்றுப்பிரயாணம் செய்துவந்த கிராமவாசிகள் அமைக்கவேண்டுமென்றும், மேலும் அவர்கள், இனிமேல் செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகளில் ஏறக்குறைய 90 சத விகிதத்தையாவது, தாங்களே எடுத்து நடத்த முற்படவேண்டுமென்றும், விவாத அரங்கில் முடிவு செய்யப்பட்டது. சுற்றுப்பிரயாணம் செய்து வந்தவர்கள், தங்கள் கிராமங்களில் இனி நடக்கும் வேலைகளைப்பற்றிய விவரங்களை, அவ்வப்போது தங்களுக்குள் பரிமாறிக்கொண்டு, ஆறு மாதத்துக்கொருதடவை கூடி, முந்தைய ஆறுமாத காலத்தில் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளைப் பற்றிப் பரிசீலித்து, மேற்கொண்டு, எந்த வகையில் அபிவிருத்தி வேலைகளைப் புரிவது என்பதுபற்றி விவாதித்து முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறாக, போபாலில், கிராமவாசிகள் ஊர்வலங்களும் விவாத அரங்குகளும் வெற்றிகரமாக நடந்து முடிவுற்றன.

—குருக்ஷேத்ரரவிலிருந்து.

மதுரை ஜில்லாவில் சமுதாய அபிவிருத்தி

திருமங்கலம் வட்டாரத்தில் 34 கம்போஸ்ட் எருக்குழிகள், 1955-ம்வருஷம் ஆகஸ்ட் மாதத்தில், தோண்டப்பட்டு, 179 டன் உரம் தயாரிக்கப்பட்டது. 787 பவுண்டு விதைகள் விநியோகிக்கப்பட்டன. ஒரு ஏக்கர் நிலத்தில், எருத்தழைச் செடிகள் பயிரிடப்பட்டன. 2 புதிய கிணறுகள் தோண்டப்பட்டு, 4 பர்லாங்கு தூரத்திற்கு ரஸ்தா ஒன்றும் போடப்பட்டது. கின்னிமங்கலததிலும் நாகலாகோட்டையிலும் இரு சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எம். போத்த நதியில், ஒரு மாதர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. கின்னிமங்கலத்திலோ, ஒரு சிறுவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லுப்பட்டி வட்டாரத்தில், 68 கம்போஸ்ட் குழிகள் தோண்டப்பட்டு, 320 டன் உரம் தயாரிக்கப்பட்டது. 2,482 பவுண்டு விதைகள் விநியோகிக்கப்பட்டன. ஜப்பானிய முறைப்படி, மேலும் 8 ஏக்கர் நிலத்தில், பயிர் சாகுபடி செய்யப்பட்டது. 700 மரங்கள் நடப்பட்டன. 2,025 அடி நீளத்துக்கு சாக்கடை அமைக்கப்பட்டது.

ஆத்தூர் வட்டாரத்தில், 500 எருத் தழைச் செடிகள் நடப்பட்டன. 69 மணங்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன.

மற்ற ராஜ்யங்களில் :

கிராமத் தொழில்கள் வளம்பெற ஒரு புதிய திட்டம்

எஸ். கே. டே, I.C.S., அபிவிருத்தி கமிஷனர், மேற்கு வங்காளம்.

[பாரத நாடெங்கும் கிராம நலத் துறையில் எழுச்சி ஏற்பட்டுள்ளது. புத்தம் புதிய கருத்துக்கள் உருவாகி, மக்களிடையே மனமாறுதலேயும், சமுதாய வளர்ச்சியையும் உண்டாக்கி வருகின்றன. பன்னெடுங் காலமாக இருந்துவரும் பழக்க வழக்கங்கள், புதிய சூழ்நிலேக்கேற்ப வளம்பெற்று, சுபிட்சப் பாதைக்கு உரமூட்டுவதை அனுபவத்தில் பார்க்கிறோம். 'பண்டமாற்றம்' என்பது நம் நாட்டில் மிகப் பழைய காலத்தில் இருந்த வியாபார முறை. மேற்கு வங்காள ராஜ்யத்தில், பண்ட மாற்றுத் துறையில் ஒரு பெரிய பரிசோதனே நடத்தப்படுகிறது. அதாவது, கிராமத் தொழில்களே வளர்க்கவும், கிராமவாசிகளின் வசதிகளேப் பெருக்கவும், பரஸ்பரம் ஒத்துழைக்கக்கூடிய முறையில், ஒரு திட்டத்தை உருவாக்கி, அதை ஒரு சில கிராமங்களில் அமுல் நடத்தி வருகிறார்கள். இந்தப் புதிய பரிசோதனேயைப்பற்றி, அந்த ராஜ்யத்து அபிவிருத்தி கமிஷனர் ஸ்ரீ டே (சமுதாய நலத் திட்ட நிர்வாகஸ்தரான ஸ்ரீ டே அல்ல) கூறியிருப்பதை, கீழே சுருக்கமாக வெளியிட்டிருக்கிறோம் ; நம் ராஜ்யத்தில் இது எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை குறித்து, அதிகாரிகளும் பொதுநலச் சேவையாளரும் சிந்திக்கலாம்.

—ஆசிரியர்]

இரண்டொரு மாதங்களுக்கு முன்பு, மேற்கு வங்காள ராஜ்யத்திலுள்ள சில கிராமங்களில், ஒரு புதிய இயக்கம் பரவ ஆரம்பித்தது. விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையிலுள்ள ஸ்தல மக்களே, முதன் முதலாக, இந்நூதன இயக்கத்தை ஆரம்பித்து வைக்க, துணிவுடன் முன் வந்தார்கள். அவர்களெல்லாரும் பெரும்பாலும் கைநுட்ப வேலேத் தொழிலாளர்களே. அவர்களில் சிலர், மண் பாண்டம் செய்பவர்கள். சிலர், கூடை முடைவதில் கைதேர்ந்தவர்கள். சிலர், பற்பல மோஸ்தர்களில் துணிகளே நெய்யும் கை நெசவாளர்கள்.

இவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசி, ஒவ்வொருவரும், இப்போது உற்பத்தி செய்வதைவிட மேற்கொண்டும் அதிகமாகச் சாமான்களே உற்பத்தி செய்து, வேறு சிலருடைய தேவைகளேச் சமாளிக்கமுடியும் என்பதை உணர்ந்தனர். விற்பனேக்கு மட்டும் பத்து வேஷ்டிகளே நெய்து வந்த நெசவாளர், இப்போது, மேற்கொண்டும் ஒரு வேஷ்டியை நெய்கிறார். ஏனெனில் தச்சுத் தொழிலாளர் ஒருவர், நெசவாளர் கூடுதலாகத் தயாரித்துள்ள துணியைத் தாமே வாங்கிக்கொண்டு, அதற்குப் பதிலாக, நெசவாளருக்குத் தேவைப்படும் ஜன்னல் சட்டத்தையும் தயாரித்துக் கொடுத்து விடுகிறார். முன்பு, தச்சுத் தொழிலாளர், இம்மாதிரி கூடுதலாக ஜன்னல் சட்டத்தை தயாரிப்பதில்லே. ஏனெனில், அவ்வாறு கூடுதலாகத் தயாரிப்பதால் விற்பனேயும் ஆகாது, லாபமும் இடைக்காது என்று அவர் எண்ணியிருந்தார். இதனால், அவர் கூடுதலாக எதையும் தயாரிப்பதில்லே ; அதன் காரணமாக, அவருக்குத் தேவைப்படும் வேஷ்டியும் கிடைக்காதிருந்தது. இப்போதோ, கூடுதலாக நெசவாளர் நெய்யும் வேஷ்டியும், அதேவிதம் தச்சுத் தொழிலாளர் தயாரிக்கும் சாமானும், ஒரு புதிய விற்பனே ஏற்பாட்டை உருவாக்கியுள்ளன.

புதிய பண்ட மாற்று முறை

விலேவாசிகள்படி மாற்றிக்கொள்ளாமல், நேரிடையாகவே சாமான்களே மாற்றிக் கொள்வதற்குரிய பழைய பண்டமாற்று முறையை மீண்டும் பின்பற்ற அவர்கள் விரும்பவில்லே. அவர்கள் தயாரிக்கும் சாமான்களின் விலே மதிப்பைச் சரியாக நிர்ணயித்துக்கொள்ள அவர்கள் விரும்பினார்கள். இப்புதிய பண்ட மாற்றுக்காக, அவர்கள் தயாரிக்கும் பொருள்கள் ஒவ்வொன்றின் வாணிப விலே என்னவாயிருக்கும் என்பதை அவர்களே ஒருவருக்கொருவர் கலந்து முடிவு செய்தனர். எல்லாரும் ஆமோதிக்கக்கூடிய முடிவு ஏற்படுவதில் கஷ்டமெதுவும் ஏற்படவில்லே.

புதிய பண்டமாற்று முறைப்படி, மாற்றிக்கொள்ளப்படும் சாமான்களின் விலேவாசிகள் சரி சமமாக இருப்பதில்லே. அதன் காரணமாக, பற்று வரவு கணக்கும் வைத்துக் கொள்ள நேரிடுகிறது. இக் கணக்குகளெல்லாம், மேலும் நடைபெறும் பேரங்கள் மூலம், சரிக்கட்டப்பட்டு விடுகின்றன. உதாரணமாக, முத்து என்பவர், தாம் முடைந்த கூடைகளில் சுமார் ரூ. 1–8–0 பெறுமானமுள்ளவைகளே, நெசவாளரான மணி என்பவருக்கு விற்று, அதற்குப் பதிலாக,

மணியிடமிருந்து ரூ. 2 பெறுமான வேஷ்டியை வாங்கிக் கொண்டிருந்ததாக வைத்துக் கொள்வோம். இந்த பேரத்தின்படி, முத்து, மணிக்கு ரூ. 0–8–0 பாக்கிதர வேண்டியிருக்கிறதல்லவா. இந்த பாக்கி எப்படி வசூலாகிறது ? முத்து, கருமாரரான முருகனிடம் எட்டணு பெறுமான கூடையை விற்கிருர். முருகனே, முத்துவுக்குப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக, மணிக்கு எட்டணு பெறுமான கத்தியை விற்று விடுகிருர். இந்த பேரத்தின் மூலம், முத்து, மணிக்குத் தரவேண்டிய பாக்கி வசூலாகிவிடுகிறது.

அறுபது கிராமங்களில் புதுத்திட்டம்

மேற்கு வங்காளத்திலுள்ள, சில கிராமங்களில், இம் மாதிரிப்பட்ட பேரங்கள், புதிய பண்டமாற்று முறையின் படி நடந்தன. ஆனுல், மக்களில் அநேகர், இம் முறையைப் புறக்கணிக்க முயற்சித்தனர். எனினும், புது முறை பரவ ஆரம்பித்தது. இரண்டு மாத காலத்துக்குள் ளாகவே, 70 கிராமங்களில், இப் புதுத் திட்டம் நிறைவேற ஆரம்பித்து விட்டது. சுமார் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான சரக்குகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டன. கைநுட்பவேலைத் தொழிலாளர்களிடையே மட்டும், இப் புதிய பண்டமாற்று பேரம் நடைபெறவில்லை. கிராமங்களில், சகல விதப்பட்ட சாமான்களைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் அனைவரும், கூடுதலாகச் சாமான்களை தயாரித்துக் கொடுத்துவிட்டு, இதரர்களிடமிருந்து, அவர்கள் உபரியாகத் தயாரித்த பொருள்களைக் கொள்முதல் செய்ய முற்பட்டனர். சாகுபடியாளர்கள், தாங்கள் விளைவித்த பொருள்களில் ஓரளவை, வணிகக் களத்துக்கு அனுப்பாமல் வைத்திருந்து, கருமாரர் கூடுதலாகத் தயாரிக்கும் விவசாயக் கருவிகளைப் பெற்று, அவைகளுக்கு பதிலாகத் தாங்கள் இருப்பில் வைத்திருந்த விளைபொருள்களைக் கொடுத்தனர். வேலை கிடைக்காமலிருந்த பொழுதெல்லாம், தொழிலாளர்கள், குடிசைகளைக் கட்டியும் மராமத்து செய்தும், குடிசைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து, அவர்கள் விளைவித்த பொருள்களை, ஊதியமாகப் பெற்றுக் கொண்டனர்.

கிராமத் தொழில் முன்னேற்றத்துக்கு, இத் திட்டம் உதவுகிறதா ? கிராம மக்கள், தங்களுக்குள்ளாகவே இக் கேள்வியை அடிக்கடி கேட்டுக்கொள்வதுண்டு. அதற்குரிய பதிலை அவர்களே அளிப்பதற்கும் தயங்குவதில்லை. வேலை நேரம் முடிந்தபிறகு, மேற்கொண்டும் அதிக நேரம் உழைத்து மரச் சாமான்களைத் தயாரித்ததின் மூலமாக, கிராமத்திலுள்ள நெசவாளரிடமிருந்து தாம் வேஷ்டியைப் பெறச் சாத்தியமிருந்ததென்று தச்சுத் தொழிலாளர் ஒருவர் குறிப்பிட்டார். இவ்வாறு, அவர் அதிகநேரம் உழைத்து, கூடுதலாக மரச் சாமான்களைத் தயாரிக்காதிருந்தால், தமக்குத் தேவைப்படும் வேஷ்டியை அவர் ரொக்கமாகப் பணம் கொடுத்து கடையிலிருந்து விலைக்கு வாங்க நேரிட்டிருக்கும். இப்போதோ, அவரிடம் அம்மாதிரி செலவாகாமலிருக்கும் பணத்தைக் கொண்டும் அவர் மேலும் மரக்கட்டைகளை வாங்கமுடியும். அடுத்தாற்போல், இம் மாதிரி பண்டமாற்று பேரம் மற்றொன்று நடந்தால், அப்போது தம்மிடம் மிச்சமாகும் பணத்தைக் கொண்டு, அவர் ஒரு ரம்பத்தை வாங்கலாம். இவ்வாருக, அவர் தொழிலுக்கு, கூடுதலாக மூலதனம் கிடைக்கிறது. மூலதனம் பெருகப் பெருக, அவருக்குக் கடன் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகமாகின்றன. கடன் பெற்று, மேலும், அவர் தம் தொழிலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

மூலதனம் பெருக வழி

கிராமங்களில் வீணுகிவிடும் உழைப்பை மூலதனமாக்குவதற்குத் தகுந்தவழியாக, இப் புதுத் திட்டம் காணப்படுகிறது. நம் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உழைப்பை, புதுத் திட்டத்தின் மூலம் பயன்படுத்தி, அவர்களுக்கே தேவைப்படும் பொருள்களைத் தயாரிக்கலாம். கிராம மக்கள், இதை உணர்ந்துவருவதுடன், இப் புதுத் திட்டத்தில் பெருவாரியாக புது நம்பிக்கையுடனும் ஆவலுடனும், கலந்துகொள்ள முற்பட்டிருக்கிருர்கள். அவர்களிடம் தற்போதுள்ள சொற்ப வசதிகளைப் பயன்படுத்தியே இப் புதிய பண்டமாற்று முறையைப் பின்பற்ற முன்வந்திருக்கிருர்கள். இம்மாதிரியாக நடைபெறும் வர்த்தக பேர விவரங்களை, நூதன வழிகளைப் பின்பற்றி, கணக்கு வைத்துக்கொள்ளவும், அவர்கள் முற்பட்டிருக்கிருர்கள்.

புதிய ஸ்தாபனம்

இந்தப் பண்டமாற்று வர்த்தகத்துக்காக, புதிய பாணியில் ஒரு ஸ்தாபனத்தைத் துவக்கவும் அவர்கள் எண்ணியுள்ளார்கள். ஸ்தாபன அமைப்புக்காகவும் இதர காரியங்களைக் கவனிப்பதற்காகவும் அவர்கள் சந்திப்பதற்குத் தகுந்தவாறு, ஒரு குடிசையையும் அவர்கள் கட்ட ஆரம்பித்திருக்கிருர்கள்.

இத் திட்டத்தை முதலில் ஆரம்பித்துவைத்த அரசாங்கத் திட்ட அதிகாரிகள், கிராம மக்களின் உற்சாகத்தைக் கண்டதும், மக்களே தங்களுடைய இஷ்டப்படி இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வழி கோலுவது நல்லது என்று முடிவு செய்தார்கள். இப்போதெல்லாம், கிராம மக்களிடமிருந்தே அதிகாரிகள் திட்டத்தைப்பற்றிக் கற்றுக்கொள்கிருர்கள். திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுமா என்று அதிகாரிகள் கொண்டிருந்த சந்தேகம், திட்டத்தில் பங்கெடுத்துகொண்டுள்ள மக்களின் உற்சாகத்தால், சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிட்டது.

இவ்வாறு நமது கிராமங்களில் புது வாழ்வு உத்வேகத்துடன் மிளிர்ந்து வருவது, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருகிறது.

—குருக்ஷேத்ராவிலிருந்து

சென்னை நகரில் கிராமக் கைத்தொழில் விழா



சென்னை நகரில், **1955**, செப்டெம்பர் மாதத்தில், கிராமக் கைத்தொழில் விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னை கவர்னர், அவ் விழாவை ஆரம்பித்துவைத்தார். அவ் விழாவை யொட்டி, ஒரு கண்காட்சியும் எற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னை ராஜ்யத்திலுள்ள முக்கிய கிராமத் தொழில்களான உலோக சாமான்கள் உற்பத்தி, பாய் முடைதல், நெட்டிவேலை, சங்கீதக் கருவிகள் செய்தல், அழகான தட்டுகள் செய்தல், விக்கிரகங்கள் செய்தல், பொம்மைகள் செய்தல் முதலியவை இடம் பெற்றிருந்தன. அவ் விழாவை யொட்டி எடுக்கப்பட்ட புகைப் படங்கள், இப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.



தமிழகத்தில்

காந்தி ஜெயந்தி தினத்தன்று சென்னை நகருக்கு விஜயம் செய்த பிரதமர் நேருஜி, அ
செங்கல்பட்டு ஜில்லாக்களிலும் புதுச்சேரியிலும் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவர், சென்ற
நடந்த மாபெரும் பொதுக்கூட்டங்களில், பிரதமர் நேருஜி தமிழரின் பண்பாட்டைப் பாராட்டி
தத்துவத்தை விளக்கிக் கூறினர். . . பூச்செண்டுகளையும், பூமாலைகளையும் சமர்ப்பித்
சென்னை ராஜ்ய அமைச்சர்களுடனும் அளவளாவினர். எல்லாவற்றிற்கும் மேலாக, "
க்ஷேத்திரங்கள்" என்று குறிப்பிட்டார்.


7 DEC 1958

பிரதமர் நேரு

அக்டோபர்மீ 2, 3, 4, 5 தேதிகளில், சேலம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, வட ஆற்காடு,
விடமெல்லாம், மக்கள் லட்சக்கணக்கில் திரண்டு, மகத்தான வரவேற்பளித்தனர். அங்கங்கே
ஞர். . . . ஒழுங்கும், கட்டுப்பாடும், ஒத்துழைப்பும், பண்பும் மனிதனை உயர்த்தும் என்னும்
அஞ்சலி செய்த குழந்தைகளைக் கொஞ்சி மகிழ்ந்தார். . . . . அதிகாரிகளுடனும்,
'சமுதாய அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் இடங்களே, நான் காணவிரும்பும் புண்ய

மாலம்புழா நீர்ப்பாசனத் திட்ட வேலை பூர்த்தி

17 DEC 1955
MADRAS



சென்னை ராஜ்யத்தில் நீர்ப்பாசன வசதி மேன் மேலும் பெருகிவருகிறது. . . முக்கியமாக, மலபாரில், இதுவரை நீர்ப் பாசனத் திட்டம் எதுவும் நிறைவேற்றப்படாமலே இருந்தது. மாலம்புழாத் திட்ட வேலை, 1949-ம் வருஷம் ஆரம்பமாகி இப்போது பூர்த்தியாகி யிருக்கிறது. இத் திட்டத்

நிலங்களுக்கு பாசன வசதி கிட்டும். 349 மைல் நீளம் கொண்ட கால் வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. திட்டவேலை பூர்த்தியானதையொட்டி அக்டோபர் மாதம் 9-ந் தேதி நடைபெற்ற விழாவில், முதல் அமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ் பங்கெடுத்துக்கொண்டார். நீர்ப் பாசன பிரதம இஞ்சினீயர் அவர் களையும் அதை நிறைவேற்றிய இஞ்சினீயர்களையும் மற்ற பிரமுகர் களையும் படத்தில் காணலாம்.

17 DEC 1955
MADRAS

விவசாய மகா காவியம்

[உலகம் தோன்றியது முதல், விவசாய மகா காவியம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறது. மனித சமுதாய வளர்ச்சியே அந்தக் காவியத்தின் உயிர்நாடி. இக்காவியம் மேலும் சிறப்புற, அறிவு, ஆராய்ச்சி, அனுபவம் ஆகியவற்றில் பண்பட்ட நிபுணர்கள் இத்துறையில் கவனம் செலுத்தி வருகின்றனர். அக்டோபர் மாத இதழில் வெளியான கட்டுரையில் விவசாய இலாகா மாஜி டைரக்டர், சென்னை ராஜ்யத்தில், 1931-லிருந்து 1951 வரையுள்ள காலத்தில், தானிய உற்பத்தி குறைந்து ஜனத்தொகை பெருகியதைச் சுட்டிக்காட்டி, தானிய உற்பத்தி பெருக, உர உற்பத்தியைப் பெருக்க வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். இந்த இதழில் அவருடைய கட்டுரை தொடர்ந்து வெளியாகிறது.]

எம். எஸ். சிவராமன், I.C.S., சென்னை விவசாய இலாகா மாஜி டைரக்டர்.

புஞ்சைகளுக்கு அவற்றைக் கம்போஸ்டு செய்து எருவாகப் போடலாம். இத்தழையுரங்களை சாதாரண சாகுபடிக்கு குந்தகம் வராதபடி உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் ஒருபடி முன்னேறலாம். நம் ராஜ்ய விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் இயற்கை உரங்களை அதிகரிக்க, முறையான நடவடிக்கை சமீபத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இப்போது அப் பண்ணைகளின் நஞ்சைகளுக்குத் தேவையான பசுந்தாளுரங் களையும், புஞ்சைகளுக்குத் தேவையான கம்போஸ்டு உரங் களையும் அந்த அந்தப் பண்ணையிலேயே உற்பத்தி செய் கிறார்கள். அப்படி உற்பத்தி செய்வதால் சாதாரணமாய் பயிர் சாகுபடி செய்வதற்கு ஒரு குந்தகமும் ஏற்படவில்லை. இதற்கு எருத்தழை கொடுக்கும் செடிகளை முறையாக நட்டு வளர்த்தோம்.

பசுந்தாளுர உற்பத்தி

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் செய்ததையே குடியானவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் நிலத்தி லும் அம்முறையை உடனடியாக அனுசரிக்கச் செய்வது கிராம சேவகர், விஸ்தரிப்பாளர்களின் முதல் கடமையாகும். நெற்பயிர் சாகுபடியாகும் நஞ்சைகளில் சுலபமாக பசுந் தாளுரச் செடிகளை உற்பத்தி செய்யலாம். ஜூலை மாதத்தில் 2—3 அங்குலத்துக்கு ஒன்றாக வயல் வரப்போரங்களில் செஸ்பேனியாவை நட்டால், அடுத்த போக நெல்லுக்குப் போதிய அளவு 6,000 ராத்தல் பசுந்தாளுரம் அக்டோபரில் கிடைக்கும். அந்தச் செடிகளில் சிலவற்றை விதைக்கு விட்டால், டிசம்பருக்குள் 60 ராத்தல் விதையும் கிடைக்கும். அந்த 60 ராத்தல் செஸ்பேனியா விதையையும், நெல் அறுவடைக்கு முந்தி ஜனவரியில் அந்த வயலில் விதைத் தால், ஐந்து மாதத்தில் 60,000 ராத்தல் பசுந்தாளுரம் உற்பத்தியாகும். தனிப்பயிராக செஸ்பேனியா இரு மாதத் தில் 10,000 ராத்தல் பசுந்தாளுரமும், மூன்று மாதத்தில் 20,000 ராத்தல் பசுந்தாளுரமும், ஐந்து மாதத்தில் 50,000 ராத்தல் பசுந்தாளுரமும் உற்பத்தியாகும்.

நஞ்சை வயலில் நெல்லுடன் செஸ்பேனியாவையும் வளர்க்கலாம். விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் அப்படி வளர்த்ததனால், நெல்லுக்கு ஒரு கெடுதியும் நேரவில்லை. ஒரு செடியிலிருந்து 9,000 விதைக்கு மேற்பட்ட 4 அவுன்சு விதை உற்பத்தியாகும். ஒவ்வொரு குடியானவரும் ஒரு பிடி விதையிலிருந்தே தமக்குத் தேவையான பசுந்தாளுரத்தையும் விதையையும் சுலபமாக உற்பத்தி செய்துகொள்ளலாம். செஸ்பேனியாவால் ஏற்படும் நன்மைகள் இவை.

வரப்புகள் குறுகியுள்ள இடங்களுக்கு செஸ்பேனியா ஏற்றது. வரப்புகள் பெரிதாயிருக்கும் இடங்களில் கிளைரிசிடியா, இண்டிகோபிரா, கொடிப்பூவரசு முதலிய தழை யுரம் தரும் எப்போதுமுள்ள செடிகளை நடலாம். விவ சாயப் பண்ணைகளில் எல்லா இடங்களிலும் எருத்தழை கொடுக்கும் செடிகளை வைத்து வளர்ப்பதை அங்கங்கே பார்க்கலாம். கிளைரிசிடியாவும், செஸ்பேனியாவும் சீக்கிரம் வளரும் செடிகள் என்பதற்காகச் சிபாரிசு செய்யப் பட்டன. அங்கங்குள்ள வழக்கப்படி தழையுரம் கொடுக்கக்



உற்பத்தி பெருக....யந்திர சாதனம்

கூடிய எந்தச் செடியையும் வாய்க்கால் கரைகளிலும் தடத் தோரத்திலும் இன்னும் இருக்கும் காலியிடங்களிலும் நட்டு உற்பத்தி செய்யலாம். ஏக்கருக்கு குறைந்தது 4,000 ராத்தல் பசுந்தழை உரம் கொடுக்கக்கூடிய 200 செடி யாவது ஒரு ஏக்கரைச் சுற்றி நடப்படவேண்டும். அதனால் வேணும்போது அந்த நிலத்துக்குத் தேவையாகும் தழை யுரத்தை விவசாயி அதேயிடத்தில் பெறலாம்.

வேலிக்குப் பொருத்தமானது சீமை வேல்

கால்நடைகள் நடமாடாதபடி பாதுகாவல் உள்ள இடங்களில் செடிகள் சீக்கிரம் வளரும். சாகுபடி சமயத்தில் 6–8 அடி நீளமுள்ள கம்புகளை நட்டு வளர்த்தாலும் சீக்கிரமாக வளரும். நடுவதற்கு போதிய அளவு கம்புகள் உடனே கிடைக்காமலிருந்தால், சிறு குச்சிகளை பாதுகாவல் உள்ள நாற்றங்கால்களில் நட்டு ஒரு வருஷம் வரை வளர்த்துப்பின் நடலாம். குடியானவர்களுக்குள் ஒற்றுமையிருந்தால் சிலருக்கு சொந்தமான 10 முதல் 50 ஏக்கர் வரை ஒரே சதுரமாக வளைத்து நல்ல வேலி போட்டுக் கொள்ளலாம். வண்டி முதலிய போக்குவரத்துக்கு வேணுமான இடங்களில், தடம் விட்டுக்கொள்ளலாம். வேலிக்கு மிகப் பொருத்தமானது சீமைவேல் என்னும் புரோசாபிஸ் செடியாகும். உற்பத்தியைப் பெருக்குவதற்கும், சாகுபடிச் செலவைக் குறைப்பதற்கும், தேவையான உரத்தைத் தாமே உற்பத்தி செய்துகொள்ளுவதற்கும் வேண்டிய வழியை, கிராம சேவகர், விஸ்தரிப்பாளர்கள் உற்சாகத்துடன் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி உதவி செய்ய வேண்டும்.

பசுந்தாளுரத்தால் மட்டும், நூற்றுக்கு 15 முதல் 100 சதம் அதிக விளைச்சல் உற்பத்தியாகியுள்ளது என, தஞ்சாவூர் அனுபவத்தால் தெரிகிறது. விளைச்சல் இப்படி அதிக வித்தியாசப்படுவதுக்கு அவரவர்கள் செய்த பண்ணை முறையே காரணமாகும். பசுந்தாளுரம் இடுவதால் வருஷா வருஷம் விளைச்சல் உயர்ந்துகொண்டே சுமார் 3,000 ராத்தல் வரை போகிறது. அதற்குப்பிறகு பலவித சாகுபடி பண்ணை முறைகளால் விளைச்சல் அதிகரிக்கும். ஆரம்ப உழவு, எருவிடுதல், விதை தேர்ந்தெடுத்தல், நீர் பாய்ச்சுதல், பயிர் பாதுகாப்பு செய்தல் போன்றவைகளை ஒழுங்குபட முறையாகச் செய்தல் அவசியம்.

பொறுக்கு விதை உற்பத்தி

அடுத்தாற் போல, உற்பத்தியைப் பெருக்க விளைச்சல் அதிகம் தரும் பொறுக்குத்தர விதைகளையும், நோய் நொடி பற்றாத நல்ல விதைகளையும் உபயோகிக்கவேண்டும். எல்லாத் தானியங்களிலும் பொறுக்கு விதைகள் உற்பத்தியாயிருந்தாலும், எல்லா விவசாயிகளும் அவற்றை உபயோகிக்கவில்லை. கிராமசேவகரோ, விஸ்தரிப்பாளரோ இரண்டே வருஷத்தில் ஒவ்வொரு ஏக்கரிலும் ஒவ்வொரு தானியத்திலும் பொறுக்கு விதையை உபயோகிக்கும்படி செய்வது சுலபம். முதல் வருஷத்தில் கொஞ்சமாகக் கிடைக்கும் மூல விதையை அபிவிருத்தி செய்யலாம். இரண்டாம் வருஷத்தில் அதைக் கிராமம் முழுவதும் பரவப் போதுமான விதையை உற்பத்தி செய்யலாம். பல ஜில்லாக்களில் மூல விதை கிடைக்கும். ஆதலால் கிராமத்துக்குப் போதிய அளவு விதையை, ஒரே வருஷத்தில் கூட உற்பத்தி செய்துவிடலாம். உதாரணமாக, ஒரு கிராமத்தில் 1,000 ஏக்கர் நெல் சாகுபடியாகிறதாக வைத்துக்கொள்வோம். அதற்கு முழுதும் 40,000 ராத்தல் விதை நெல் தேவையாகும். முதலில் கிராம சேவகரிடமோ அல்லது விஸ்தரிப்பாளரிடமோ, ஒரு ஏக்கருக்குப் போதுமான 40 ராத்தல் பொறுக்கு விதை நெல் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இதிலிருந்து முதல் வருஷக் கடைசியில் 2,000 ராத்தல் நெல் விளையும். இந்த விதையில் பாதியாகிய 1,000 ராத்தல் விதை நெல்லை பொறுப்புள்ள விவசாயிகளிடம் கொடுத்து உற்பத்தி செய்தால், இரண்டாம் வருஷக் கடைசியில் 50,000 ராத்தல் விதை நெல் கிடைக்கும்; மேலேகுறிப்பிட்ட கிராமத்தின் தேவைக்கு அதிகமாகவே, விதை நெல் உற்பத்தியாகும். பொறுக்கு விதைகளை அதிகரிக்கும் வேலையைப் பொறுப்புள்ள விவசாயிகளிடம் ஒப்படைப்பதிலும், அப்படி பெருகிய பொறுக்கு விதைகளை அந்தக் கிராமத்துக்குள்ளேயே சாதாரண தானியங்களுக்குப் பரிமாறிக்கொள்ளும்படி செய்வதிலும் கிராமசேவகர் அல்லது விஸ்தரிப்பாளர் தம் சாமர்த்தியத்தைக் காட்டவேணும். இம்முறையில் எல்லா தானிய பொறுக்கு விதைகளையும் எல்லா நிலங்களிலும் பரவச்செய்ய ஒரே வருஷம் போதும். அந்த வேலையை இரண்டு வருஷத்திலாவது செய்யமுடியாது போனால், அந்த கிராமசேவகர் அல்லது விஸ்தரிப்பாளரின் சாமர்த்தியம் அவ்வளவுதான் என அறியலாகும்.

கிராம விதைப் பண்ணைகள்

ஒவ்வொரு கிராமத்திலும் பொறுக்கு விதைகளை இப்படி உற்பத்தி செய்தால், இதுவரை அவற்றை உபயோகியாத விவசாயிகளும் இவ்விதைகளின் விளைச்சல் தரத்தைத் தம் உள்ளூரிலேயே பார்த்து, தாமும் அவற்றை உபயோகிப்பார்கள். கொடுபடும் விதை கொஞ்சமாயிருப்பதால், விவசாய இலாகாவும் இவ்விதைகளைச் சுத்தமாகவும் கலப்பில்லாமலும் உற்பத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தமுடியும். அதிக அளவில் விதைகளை வாங்கி எடுத்துச்செல்லும் அவசியமிராது. விவசாயிகளுக்குத் தேவையாகும் பொறுக்கு விதைகள், தம் கிராமத்திலேயே கிடைக்கும். கிராம விதைப்பண்ணைகளின் மூலம், ஒவ்வொரு கிராமமும் தனக்குத் தேவையாகும் சிறந்த விதைகளுக்குப் பிறரை எதிர்பாராமல், தானே உற்பத்தி செய்து, சுலபமாகவும் மலிவாகவும் சீக்கிரமாகவும் பரவும்படி செய்யலாம். இதைப்போல எல்லாத் தானிய விதைப் பண்ணைகளையும் அங்கங்கேயே நடத்தவேண்டும்.

நம் ராஜ்யத்தின் பல கிராமங்களில் விறகு போதிய அளவு கிடைப்பதில்லை. அதனால் மாட்டுச் சாணியை அடுப்பு எரிக்க உபயோகிக்கிறார்கள். விறகு உற்பத்தியைப் பெருக்க கிராம சேவகரும், விஸ்தரிப்பாளரும் முதன்மையாக உழைக்கவேண்டும். "புரோசாபிஸ்" என்னும் சீமை வேலஞ் செடி சீக்கிரம் மரமாக வளரும். விறகுக்கும், உழவு கருவிகள் செய்வதற்கும் அதன் மரம் உபயோகப்படும். இச்செடியை ஆடு மாடு தொடாது. இது வறட்சி தாங்கக் கூடியது. வேலஞ் செடியைப் போல இதன் முள் விழுவதில்லை. சிலவகைகள் முதலில் படர்ந்து வளர்ந்தாலும் இரண்டு வருஷத்தில் நல்ல மரமாகிவிடும். அம்மரங்களால் ஜனங்கள் நடமாட்டத்துக்குக் கெடுதியில்லை.

கிராமத்தார் ஒன்று சேர்ந்தால், "புரோசாபிஸ்" தோப்பாகத் தரிசு நிலங்களில் வளர்க்கலாம்.

விதைப்பு முறை

கீழ்வரும் திட்டப்படி செய்க. கிராம முக்கியஸ்தர்கள் தங்கள் உழவு முடிந்ததும், சுமார் 2 மணி நேரத்துக்கு காலி நிலத்தில் 10 அடிக்கொரு படைச்சால் எடுக்கும்படி செய்யலாம். அதில் அடிக்கொரு விதையாக விதைத்தால் ஒரு ஏக்கரை அரை மணியில் முடிக்கலாம். ஜூலை—ஆகஸ்டில் இம்மாதிரி செய்தால் ஏராளமான விஸ்தீர்ணத்தில் 'புரோசாபிஸ்' விதைத்து வளர்க்கலாம். மழைக்கு பிறகு விதைகள் முளைக்காதிருக்கும் இடங்களில் திரும்ப விதை ஊன்றலாம். மழையில் செடிகள் 4 அங்குலம் உயர்ந்து வளர்ந்துவிட்டால் பிறகு அவற்றிற்கு ஒருவித கவனிப்பும் தேவையில்லை. 'புரோசாபிசை' வேலிக்கும் வளர்க்கலாம், அல்லது வேலிக்காலில் வளர்த்து வேலியை அடர்த்தியாக்கிக்கொள்ளலாம். தரிசு நிலங்களிலும் சரிவுகளிலும், மண் ஈரத்தைக் காக்கவும் அதிகரிக்கவும் இது உதவும். விவசாய முன்னேற்றத்தில் 'புரோசாபிஸ்' மிக அவசியமானது.

ஊற்று நீர் உபயோகம்

பூமிக்குள்ளிருக்கும் ஊற்று நீரை, இன்னும் அதிகமாக உபயோகிக்கவேண்டும். பல கரை வெளிப் பிரதேசங்களில் ஊற்று நீரை நன்றாக உபயோகிக்க முடிந்தது. மணல் சட்டு உள்ள இடங்களில் பில்டர் பாயிண்டு குழாய்க் கிணறுகள் அமைக்கலாம். தஞ்சாவூரில் பில்டர் பாயிண்டு (வடிமுனை) குழாய்க் கிணறுகள் அமைத்ததால், இரு போகமும் நெல் அறுவடையான பிறகு, அதே வயலில் பி. 216 எப்பருத்தி விதைக்கப்பட்டது. அதனால் குடியானவர்களின் ஆதாயம் அதிகரித்ததும் அல்லாமல், அவர்களுக்கும் வருடமுழுதும் வேலை இருந்தது. ஒரு பில்டர் பாயிண்டு குழாய்க் கிணற்றிலிருந்து 10 ஏகர் பருத்திக்கு நீர்பாய்ச்சலாம். இதைப் போலவே, மலையாளம், தென் கன்னடம் நீலகிரி அல்லாத மற்ற இடங்களிலும் பில்டர் பாயிண்டுகளின் உதவியால் பருத்தி, நிலக்கடலை போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யலாம். அதனால் சாகுபடி வருஷமுழுதும் இருந்துகொண்டே இருக்கும்படி செய்ய, கிராம சேவகர் அல்லது விஸ்தரிப்பாளர் உற்சாகத்துடன் உழைக்கலாம். ஒரு ஜதை மாடுகளால் நீர் இறைக்கக்கூடிய பிளஞ்சர் பம்பு ஒன்றை விவசாய இலாகா கண்டு பிடித்துச் செய்துள்ளது. அதனால் 2–3 ஏக்கருக்கு நீர் பாய்ச்சலாம். பில்டர் பாயிண்டு அல்லது குழாய்க்கிணறு அமைப்பது சுலபம். அதனால் கிடைக்கும் பலன் அதிகம்.

நம் விவசாய அடிப்படையிலிருக்கும் குறைபாடுகளை நீக்க, கிராம சேவகரோ, விஸ்தரிப்பாளரோ பாடுபடவேண்டும். இயற்கையுரம் குறைந்திருப்பதையும் பொறுக்கு விதை அதிகம் பரவாதிருப்பதையும், இரண்டே வருஷத்தில் போக்கிவிடலாம்.

ஹரிஜனங்களுக்கு மாதிரி குடியிருப்பு

காரியம்பட்டித் திட்டம்

மதுரை ஜில்லா பழனி தாலுகா காரியம்பட்டி கிராமத்தில் 80 ஹரிஜனக் குடும்பங்களுக்கும் 10 கவுண்டர் குடும்பங்களுக்குமாக 90 வீடுகளுடன் ஒரு மாதிரிக் குடியிருப்பை அமைக்க அரசினர் அனுமதியளித்திருக்கின்றனர்.

1954 செப்டம்பரில் அவ்வூரில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் அங்கிருந்த ஹரிஜன சேரியே அழிந்து போயிற்று. ஹரிஜனங்களில் பெரும்பாலோர் நிலமில்லாத கூலி யாட்கள். அங்கு நிலச்சுவான்களான கவுண்டர்களின் பண்ணையாட்களாக அவர்கள் வேலை செய்து வருகின்றனர். எனவே இங்கு ஒரு மாதிரி குடியிருப்பை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 1,350 ஆகிறது. 90 வீடுகளுக்கும் தேவையாகும் செங்கல்லையும் ஓடுகளையும் வீடுகளைப் பெறப் போகிறவர்களே செய்து கொள்வார்கள். வீடுகளைக் கட்டும் காலத்தில் ஹரிஜனங்களுக்கு சாப்பாடு வசதி செய்துகொடுப்பதாய் கவுண்டர்கள் முன் வந்திருக்கிறார்கள். 10 கவுண்டர் குடும்பங்களும் ஹரிஜனங்களுடன் தங்கள் 10 வீடுகளையும் கட்டிக்கொள்வார்கள். அவர்களுக்குப் பக்கத்திலேயே குடியிருப்பார்கள். இது தீண்டாமையொழிப்பு பிரசாரத்துக்கும் நல்ல வழிகாட்டியாகும். எனவே ஒவ்வொரு வீட்டுக்கும் நிகர விலை ரூ. 460 ஆக மொத்தம் இந்தத் திட்டத்துக்கு ரூ. 41,657 செலவாகும். குடியேறும் 90 குடும்பங்களும் ஒரு கூட்டுறவு சங்கமாகச் சேர சம்மதியளித்துள்ளனர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் சர்க்கார் ரூ. 220 மானியமாகவும் ரூ. 240 வட்டியில்லாக் கடனாகவும் கொடுக்க உத்தரவிட்டுள்ளனர். இந்தக் கடன் மாதம் ரூ. 2 வீதம் 10 வருஷங்களில் திரும்பக் கொடுபடும். ஆக மொத்தம் ரூ. 42,000 சர்க்கார் அனுமதியளித்திருக்கின்றனர்.

இந்தப் பக்கத்தில் இம்மாதிரி ஹரிஜனங்களும் ஹரிஜனமல்லாதவர்களும் கூடி வாழும் பெரிய குடியிருப்பு இது தான் முதலாவதாகும். கிராமத்திலுள்ள நிலமில்லாத எல்லோருக்கும் இத் திட்டத்தின்படி வேலை கொடுக்கப்படும். சிமிட்டி தவிர மற்ற எல்லா வீடு கட்டும் சாமான்களும் ஸ்தலத்தில் கிடைக்கக்கூடியவையே உபயோகிக்கப்படும்.

சந்தா விவரம்

———

வருட சந்தா
ரூ. 1–8–0.

ஆறுமாத சந்தா
ரூ. 0–12–0.

தனிப் பிரதி
இரண்டு அணா.

கிராம நலம் பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ. 150
உள் அட்டைப் பக்கம் ..	ரூ. 125
இதர பக்கங்களில் :	
முழு பக்கம்	ரூ. 100
அரைப் பக்கம்	ரூ. 60

மற்ற விவரங்களுக்கு :—
பொதுஜனத் தொடர்பு அதிகாரி
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட், சென்னை-9.
என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

CONNEMARA PUBLIC LIBRARY
17 DEC 1956
MADRAS

கிராமங்களில் சுற்றிவரும் வாகனப் பட்டறைகள்

மதுரையில் தலைமை ஸ்தாபனம்

சிறிய தொழில்களுக்கான சேவா நிலையத்தின் நிரந்தரத் தலைமை ஸ்தாபனம் மதுரையில் ஏற்படுத்த முடிவாகியுள்ளது. அது தொழில் படுவதற்கு முன்பே, தொழிலாளருக்கு ஓரளவு உதவி புரிய முன் வந்து விட்டது. பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அங்கங்கே உள்ள கிராமத் தொழிலாளருக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்க இதனால் வசதி ஏற்படும்.

அகில இந்திய அடிப்படையில் சிறிய தொழில்களுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்படுகிற நான்கு நிலையங்களில் இந்த மதுரை நிலையமும் ஒன்றாகும். மற்ற மூன்று நிலையங்கள் பம்பாய், கல்கத்தா, பரீதாபாத் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. ஹைதராபாதிலிருந்து தெற்கே பரவிக்கிடக்கும் பகுதிகள் அவ்வளவும் அடங்கிய தென்னிந்தியாவுக்கு மதுரையில் ஏற்படுத்தப்படுகிற நிலையம் சேவை செய்யும். ஆனால், அந்த நிலையத்தை உருவாக்குவதற்கு சுமார் ஒரு வருஷ காலம் பிடிக்குமாகையால், சென்னையில் ஒரு தாற்காலிக காரியாலயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தென்னிந்திய கிராமங்களில் எட்டாத் தொலைகளிலுள்ள கைவேலைத் தொழிலாளர்கள் தொழில்நுட்ப உதவி பெறுவதற்காக இந்த நிலையத்தைத் தேடி வருவதற்குப் பதில், அவர்கள் இருக்கும் இடங்களிலேயே தொழில்நுட்ப உதவி கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருப்பதை இந்நிலையத்தின் ஒரு தனிப்பட்ட சிறப்பாகக் கூறலாம். அதற்காக, அது வாகன ரீதியான பட்டறைகள் இரண்டைத் தயார் செய்திருக்கிறது.

நம் கிராமாந்தரங்களில் தெருத் தெருவாய்ச் சுற்றிவந்து வேலை செய்யும் கைவேலைத் தொழிலாளர்கள் இருப்பது சகஜமாக எல்லோருக்கும் தெரிந்ததுதான். கத்தி சாணை பிடிப்பவர்கள், பூட்டு செப்பனிடுபவர்கள், ஈயம் பூசுபவர்கள் ஆகியோர் கிராமத் தெருக்களில் சுற்றிவந்து வீடுகளிலேயே வேலை செய்துவருவதை நாம் பார்க்கிறோம். வாகன ரீதியான பட்டறையானது அதே கருத்தின் அடிப்படையில் ஸ்தலத்திலேயே சென்று சேவை செய்வதற்காக ஏற்படுத்தப்படுகிறது.

கிராமங்களுக்குச் சென்று சேவை செய்யும் வாகனப் பட்டறை

மோட்டார்வண்டியில் பட்டறை

மோட்டார் வண்டி ஒன்றில் பல்வேறு ரக யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும். முக்கியமாக, தேய்ப்பு வேலைக்கான சாணையந்திரம், சாமான்களுக்கு உருக்கொடுப்பதற்கான திரிமணை யந்திரம், மரம் அறுப்பதற்கான ரம்ப யந்திரம், துளைபோடும் யந்திரம், தச்சுவேலை யந்திரம் முதலியவை இருக்கும். அதிக இடத்தை அடைக்காதவையாகவும், விபத்துக்கள் ஏற்படுவதற்கு இடமில்லாதவையாகவும், சுத்தமாக வேலை செய்வதற்கு வாய்ப்பானவை

யாகவும் கவனித்து இந்த யந்திரங்கள் தெரிந்தெடுக்கப் படுகின்றன. மோட்டார் எஞ்சினுடன் இணைக்கப்படுகிற மின்சார உற்பத்தி யந்திரத்தின் உதவியால் மின்சார விசை கிடைக்கும் ஒவ்வொரு யந்திரத்துக்கும் தனித்தனி மோட்டார் இருக்கிறது. எனவே, ஏதோ ஒரு யந்திரத்தில் கோளாறு ஏற்பட்டால் அதனுல் மற்ற யந்திரங்கள் இயங்குவதற்குத் தடை. ஏற்படாது.

மற்றொரு வான், வாகனரீதியான யந்திரப் பட்டறை யாகும்; அதில், லேத்து, "ஹக்ஸா" (வெட்டு ரம்பம்), டிரில் (துளைப்புக் கருவி); எலெக்ட்ரோ பிளேட்டிங் சாதனம், மின்சாரத்தையும் "காஸ்" வாயுவையும் உபயோகித்துப் பற்றவைப்பதற்கான சாதனம், பவர் பிரஸ் (விசை அழுத்தக் கருவி), "பவர் ஹாமர்" (விசைச் சுத்தி); "பெயின்ட் கன்" (சாயம் பீச்சும் கருவி) முதலிய சாதனங்கள் இருக்கும்.

சிறிய தொழில்களை நடத்த நிதி உதவி

வாகனரீதியான இந்தப் பட்டறை கிராமங்களுக்கே சென்று சேவை செய்வதால், கிராம கைவினைஞர்கள் சிரமப்பட்டு, அதிகப் பணச் செலவு செய்து தொலைதூர நகரங்களுக்கு வந்து தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் போய்விடுகிறது. பட்டறை வண்டிகள் அவர்களின் வீட்டு வாசலுக்கே போய் விடுகின்றன. அவ்வண்டிகள் கிராமத்துக்கே வந்துவிடுவதால், கிராமக் கைவினைஞர்கள் தச்சுவேலை, கருமார் வேலை முதலியவைகளைச் செய்வதற்கான நவீன யந்திரங்களைக் கொண்டு வேலை செய்வதில் நேரடி அனுபவம் பெறுவதற்கு வழி ஏற்பட்டுவிடுகிறது.

இந்த யந்திரங்கள் செய்து தரக்கூடிய "டிசைன்" அமைப்புகள் கிராமக் கைவினைஞர்கள் கையாண்டுவருகிற காலாவதியான சாதனங்களைக் கொண்டு செய்யக்கூடிய "டிசைன்" களைவிடச் சிறப்பாக இருக்கின்றன.

இந்த யந்திரங்கள் மின்சார விசையால் இயங்குபவை யாகும். எனவே, வாகனரீதியான இந்தப் பட்டறைகள் கிராம மின்சார விஸ்தரிப்புத் திட்டப்படி மின்சார வசதியுள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்யும். அந்தத் திட்டப்படி இன்னும் அதிக கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும்போது, வாகனரீதியான பட்டறைகளையும் இன்னும் அதிக அளவில் ஏற்படுத்தி இவ்வசதியை விஸ்தரிப்பது சாத்தியமாயிருக்கும்.

கடைசல் கருவி, வெட்டு ரம்பம், துளைப்புக்கருவி முதலிய சாதனங்கள் உள்ள வாகனப் பட்டறை.

சிறிய தொழில்களுக்குப் புத்துயிரூட்டி மறுமலர்ச்சியளிப்பதற்காகச் செய்யப்படுகிற விஸ்தாரமான வேலைத் திட்டத்தில் இந்த நிலைய வரிசையை ஏற்படுத்துவது ஒரு சில அங்கமேயாகும். தொழில்நுட்ப உதவி அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுவதுடன்கூட, கைவினைஞர்கள் வாடகைக் கிரய ஏற்பாட்டின்படி தவணைத் தொகைகளைச் செலுத்தி சிறிய யந்திரசாதனங்களை வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சிறிய தொழில்களை நடத்துபவர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக ராஜ்ய சர்க்கார்கள் கடன்களை அளிப்பது சாத்தியமாகும் பொருட்டு, இந்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கடன் தரவும் முன்வந்திருக்கிறார்கள். இந்த நிதி உதவியானது ராஜ்ய சர்க்கார்களின் தொழில் துறை இலாகாக்கள்மூலம் அளிக்கப்பட்டுவரும்.

நவீன தொழில்நுட்ப முறைகள் சமூக மக்களிடையே மேலும் மேலும் விரிவாகப் பரவுவதற்குத் தோதாக, கிராமாந்தரங்களில் சில முக்கிய ஸ்தானங்களை மூலக்கருவி நிலையங்களாக அமைப்பதுதான் வாகனரீதியான பட்டறைகள் இந்திய கிராமாந்தரங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும்படி பண்ணுவதன் உடனடியான நோக்கம். ஓரளவுக்குத் தொழில்நுட்பக் கல்வி பெற்றவர்களும், சிறிய அளவில் வியாபாரம் செய்பவர்களும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நவீன ரீதியில் சிறிய தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்துவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

CONNEMARA 17 DEC 1955

சிறந்த கிராமங்களுக்குப் பரிசு

அக்டோபர் இரண்டாம் தேதியன்று சென்னைக் கோட்டையில் என்றுமில்லாத ஆனந்த வெள்ளம் புரண்டோடியது. ஜல சமுத்திரத்தையடுத்து, ஜன சமுத்திரம் புதிதாக உற்பத்தியானதோ என்று வியக்கும் வகையில் மக்கள் கூட்டம் காட்சியளித்தது. சென்னை அரசாங்க ஆட்சிபீடத்தின் தலைமை அலுவலகம் உள்ள கோட்டை, எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின் திருமண வீட்டைப்போல் பொலிவுடன் விளங்கியது. பட்டொளி வீசிப்பறக்கும் கம்பீரமான கொடிக்கம்பத்தின் கீழ் நேருஜி பேசும் மேடை அலங்கரிக்கப்பட்டிருந்தது. பாரதநாட்டின் தவப்புதல்வர் நேருஜி கோட்டைக்குள் நுழைந்ததும், முதன் முதலாக அறிமுகம் செய்துவைக்கப்பட்டவர்கள், பரிசு பெற்ற கிராமத்தலைவர்களே. சென்னை ராஜ்யத்தின் பல்வேறு ஜில்லாக்களைச்சேர்ந்த 60 கிராமப்பிரதிநிதிகள் அங்கே கூடியிருந்தனர். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கொள்கையை நடைமுறையில் செய்து காட்டி, கிராமவாசிகளின் கூட்டுறவுப்பணியால் அநேக பொது நலப்பணிகளைச் செய்து, அரசாங்கத்தின் பாராட்டுதலைப் பெற்ற இவர்களுடன் நேருஜி சிறிது நேரம் அளவளாவினார். சென்னை கவர்னர், முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ், நிதியமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம், அரசாங்கத் தலைமை காரியதரிசி W.R.S. சத்தியநாதன், ஸ்ரீ ராகவாச்சாரி, ஸ்ரீ வேங்கடாசலபதி ஆகியோரும் உடனிருந்தனர்.

சிறந்த முறையில் தயாரித்திருந்த பரிசுப்பத்திரங்களை, நேருஜி அவர்கள், விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களிடம் அளித்து, எல்லாக் கிராமப் பிரதிநிதிகளுக்கும் சேர்ப்பிக்கச் சொன்னார். அச்சமயத்தில் "கிராம நலம்" பத்திரிகையின் முதல் இதழ் அவர் கையால் வெளியிடப்படும் பேறு பெற்றது. தேசபிதா காந்தியடிகளின் படத்துடன் வெளிவந்த அந்த இதழ், அவர் மனதைக் கவர்ந்தது. அதை, அன்போடு, முகத்தில் கனிவு ததும்ப, நோக்கினார். அண்ணலுக்கு அஞ்சலி செய்யும் நினைவுடன் இதழின் பக்கங்களைப் புரட்டினார். (அட்டைப்படம் பார்க்க.)

அக்டோபர் இரண்டாந்தேதி சென்னை நகர் வந்ததும், நேருஜி பெரம்பூருக்கு விஜயம் செய்து, அங்கேயுள்ள ரயில் பெட்டிகள் செய்யும் மாபெரும் தொழிற்சாலை வைபவத்தில் கலந்து கொண்டார். அந்த விழாவில் பேசும் போதுகூட, தேசியவளர்ச்சித் திட்டம், சமுதாய நலத்திட்டம் ஆகிவைகளே, தமக்கு மிகவும் விருப்பமான அபிவிருத்தித் திட்டங்கள் என்பதை எடுத்துக் கூறினார்.

அக்டோபர் மூன்றுந்தேதி, அதே சென்னைக் கோட்டையில், ஒரு சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. பிரதம மந்திரி நேருஜி அளித்த பரிசுப்பத்திரங்களை, நம் கிராம நல அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள், 60 கிராமப் பிரநிதிதிகளுக்கும் தனித்தனியே வழங்கினார். கிராமநலப் பணிகளை மேலும் தீவிரமாக நிறைவேற்ற அனைவரும் முயல வேண்டும் என்று கூறி, சென்னை ராஜ்யம் முழுவதிலுள்ள எல்லா கிராமங்களிலும் தலை சிறந்த கிராமத்திற்கு, ராஜ்யப் பரிசுஒன்று அளிக்கவும்



சென்னைக் கோட்டையில், கிராமப் பிரதிநிதிகளும், தலைமை காரியதரிசியும் இதர அதிகாரிகளும், பிரதமர் நேருஜியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆலோசிக்கப்பட்டு வருவதாகஅறிவித்தார். கிராமத்தலைவர்கள் பொது நல வேலைகளைத் திறம்பட செய்வதற்கான பல ஆலோசனையும் கூறினார்கள். அங்கங்கேயுள்ள சில கஷ்ட நஷ்டங்களையும் விளக்கினார்கள். அமைச்சர் அவர்களும், ஸ்ரீ ராகவாச்சாரி, ஸ்ரீ வேங்கடாசலபதி ஆகியோரும் அவற்றைக் கவனித்து ஆவன செய்வதாக உறுதி கூறினார்.

இப்பரிசுத்திட்டத்தின் விளைவாக, புதிய உற்சாகம் ஏற்பட்டது வாஸ்தவம் என்றாலும், ஒரு சிலருக்கு ஏமாற்றம் அளித்திருக்கும் என்பதையும் மறக்க இயலாது. ஆயினும், சோர்வடைவதற்குப் பதிலாக, ஊக்கங்கொண்டு உழைப்பதே, விரைவில் வெற்றிகாணும் வழி. பரிசுபெறத் தவறியவர்கள், இத்தகைய ஆக்க நெறியில் செல்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக, பரிசுத்திட்டத்தையே பழித்துப்பேசுவது, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அவமதிப்பதாகும்.

நேருஜி சென்னைக் கோட்டையிலிருந்து பேசியபோது, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வற்புறுத்தினார். ''சென்னை ராஜ்ய மக்கள் கட்டுப்பாட்டிற்கு மதிப்பு கொடுத்து, ஒழுங்கான முறையில் வாழும் பண்பாடு உடையவர்கள்'' என்று பாராட்டினார். இந்தப் பாராட்டு, நம் ஆக்க வேலைகளுக்கு ஊக்கம் கொடுத்து, கிராமநலப்பணிகளை மேலும் சிறந்த முறையில் நிறை வேற்றும் மன உறுதியை நமக்கு அளிக்குமாக.

* * * * * *

சிறந்தனவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் சிலவற்றில் நடைபெற்ற வேலை விவரங்களின் சுருக்கம் வருமாறு :—

கோவை ஜில்லாவிலுள்ள தடப்பள்ளி கிராமத்து மக்கள், 21,045 ரூபாயை, தங்கள் பங்காக, அபிவிருத்தி வேலைகளுக்கு அளித்திருக்கின்றனர். முக்கியமானதொரு ரஸ்தாவை அமைப்பதற்கு, ஒரு குடும்பத்துக்கு ஒரு ஆள் வீதம், கிராம மக்கள் முன்வந்து, அவ்வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றினர். அதே ஜில்லாவிலுள்ள அஞ்சூர் கிராம மக்கள், தங்கள் ஹரிஜன சகோதரர்களுக்குத் தாங்கள் உதவ வேண்டுவதன் அவசியத்தை மிகவும் உணர்ந்துள்ளனர். ஹரிஜன காலனி ஒன்றை உருவாக்குவதில், அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். மேகலாசின்னம்பட்டி, சேந்தாரப்பட்டி கிராமங்களில், பாராட்டக் கூடியவகையில், அநேக அபிவிருத்தி வேலைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஆலத்தம்பாடி கிராமத்தில், சுமார் 250 சர்க்காக்கள் இயங்கி வருகின்றன. மக்கள் அனுதினமும் கதர் நூலை நூற்று அந்நூலை பணத்துக்காகவோ இதர பொருள்களுக்காகவோ பரிவர்த்தனை செய்கிறார்கள். ஆஸ்பத்திரி ஒன்றையும், உயர்தர எலிமெண்டரி பாடசாலையையும் கட்டி முடிக்க, மக்கள் பெருமளவில் நன்கொடை அளித்திருக்கிறார்கள். 27 எச்கர் நஞ்சை நிலமும் நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது.

ரஸ்தா, பூங்கா, ஸ்நான கட்டம் அமைப்பு

சீர்காழி தாலூகாவிலுள்ள மணிக்கிராமத்திலிருக்கும் ஹரிஜனங்கள், மிக உற்சாகத்துடன் அபிவிருத்தி வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டனர். இப்போது, அக்கிராமத்தில் தீண்டாமை ஒழிந்துவிட்டது. திருச்சிற்றம்பலம் கிராமத்திலிருக்கும் பள்ளிகளில் வாசிக்கும் மாணவர்கள் அனைவருமே, இஷ்டபூர்வமாக, அபிவிருத்தி வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் ஈடுபட்டனர். கிளியனூர் கிராம மக்கள், சுமார் 40,000 ரூபாய் செலவில், ஒரு கிராம மருத்துவ நிலையத்தையும் பிரசவ விடுதியையும் கட்டி முடித்திருக்கின்றனர். திருப்பநந்தாள் கிராம மக்கள், ஆஸ்பத்திரி, பிரசவ விடுதி, சாலை முதலியவைகளை அமைக்க 15,100 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்துள்ளனர். கால்வாயிலுள்ள வண்டலை அகற்றுவதற்காகவும், ரஸ்தாவைச் செப்பனிடுவதற்காகவும், உடையாளூர் கிராம மக்கள், 13,395 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்துள்ளனர். பொரக்குடி கிராம மக்கள், ரஸ்தா, பாலங்கள், முதலியவைகளை அமைப்பதற்காக, 9,400 ரூபாய் அளித்துள்ளனர். அம்மாப்பேட்டை கிராமத்தில், ஸ்நான கட்டம், பூங்கா, பிரசவ விடுதி முதலியவை அமைக்கப்பட்டன.

கனி தரும் மரங்களை வளர்க்க, அம் மரங்களின் கன்றுகள், திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள புன்னம் கிராமத்தில் விநியோகிக்கப்பட்டன. அக் கிராமத்திலுள்ள மக்கள், கனி மரங்களை வளர்த்தல், கோழிப்பண்ணை நடத்துதல் ஆகியவற்றில் அதிக உற்சாகங் காட்டினார்கள். நெற்குணம் ஒரு குக்கிராமம். இச் சிறிய கிராமத்தில், கிராம சேவா சங்கம், பலகாரிய கூட்டுறவு சங்கம், சமூக சேவை மன்றம் முதலியவை பொது நலத் தொண்டுகளை பாராட்டத் தக்கவகையில் புரிந்து வருகின்றன. இக் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும், சர்க்கா சுழல்கிறது கதர் அபிவிருத்தியில், இக் கிராமத்து மக்கள் மிகவும் சிரத்தை காட்டி வருகிறார்கள். ஆமூர் கிராமத்தில், பென்சில் தொழிற்சாலையும், விளையாட்டுச் சாமான்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையும் சிறந்த வகையில் இயங்கி வருகின்றன. வேங்கடகுளம் கிராமத்து மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, 8,500 ரூபாயை அளித்திருக்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள, சேரன்மகாதேவியில், வார்தா செக்கு ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. வட்டாரத்திலுள்ள எண்ணெய் தயாரிப்பாளர்கள், இச் செக்கு மூலம் எண்ணெய் ஆட்டுவதற்குரிய பயிற்சியைப் பெற்றுவருகிறார்கள்.

மேற்கொண்டும் பள்ளிகள்

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள ஆதிமூர் கிராமத்தில், பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டது. இக் கிராமத்து மக்கள் அபிவிருத்தி வேலைகளுக்கு 2,397 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். அதே ஜில்லாவிலுள்ள மல்லவாடி கிராமத்தில், இரும்புக் கலப்பை மூலம் 150 எக்கரா நிலம் உழப்பட்டது. 70 எக்கர் நிலத்தில் செஸ்பேனியா

விதைக்கப்பட்டது. மேல்பளூர் கிராம மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, 2,990 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். இக் கிராம மக்கள், பழைய கிணறுகளைச் செப்பனிட்டு, புதுக் கிணறு ஒன்றையும் தோண்டியிருக்கிறார்கள். வாசகசாலை ஒன்றையும் அவர்கள் நிர்மாணித்து வருகிறார்கள். கிராமத்திலுள்ள தெருக்கள் யாவும் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளன.

மதுரை ஜில்லாவிலுள்ள பள்ளப்பட்டி கிராமத்து மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, 28,206 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் உதவிபெறுமலேயே, இக் கிராம மக்கள் தங்கள் சொந்த வசதிகளைக்கொண்டு, 3,000 ரூபாய் செலவில், ஒரு பள்ளிக்கூடத்தைக்கூட கட்டி முடித்திருக்கிறார்கள். நாட்டாபட்டி கிராமம் உசிலம்பட்டி வட்டாரத்தில், மிக முன்னேற்றமடைந்த கிராமமாக விளங்கி வருகிறது. ஆத்தூர் வட்டாரத்திலுள்ள கோனூர் கிராமத்து மக்கள் இஷ்ட பூர்வமாகத் தங்கள் பங்கைச் செலுத்தி, அநேக அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றியிருக்கின்றனர். இக் கிராமத்தில் 30 பம்பு செட்டுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. சித்திரெட்டிபட்டி கிராம மக்கள், உழைப்பு மூலம், 14,283 ரூபாயைத் தங்கள் பங்காக அபிவிருத்தி வேலைகளுக்கெனச் செலுத்தியிருக்கிறார்கள். இக்கிராமத்தில், 124 சர்க்காக்கள் சுழல்கின்றன. கதர் உற்பத்தி, இங்கு ஒரு உப-தொழிலாக விளங்கி வருகிறது. பெரிய பூலாங்குள கிராம மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, உழைப்பு மூலம் அளித்தது 18,453 ரூபாய். கிராமம் பூராவிலும், தக்கைப் பூண்டு தழை உரச் செடி வளர்க்கப்படுகிறது. ஒரு நெசவாளர் நிலையமும், இக் கிராமத்திலிருக்கிறது. கொடிமங்கலம் கிராமத்தில், 160 ஏக்கர் நிலத்தில் பொறுக்குவிதைகள விதைக்கப்பட்டுள்ளன. சுமார் 120 ஏக்கர் நிலத்தில், திருந்திய ஜப்பானிய நெல் சாகுபடி முறை பின்பற்றப்படுகிறது.

மதுரை ஜில்லாவிலுள்ள தும்பைப்பட்டி கிராமத்து மக்கள், அபிவிருத்தி வேலைகளுக்காக, 16,000 ரூபாயைத் தங்கள் பங்காக அளித்திருக்கிறார்கள். இக் கிராமத்திலுள்ள 15 வீடுகளில் பாய் பின்னும் தொழிலும், பத்து வீடுகளில் கூடை முடையும் தொழிலும் நடந்து வருகின்றன. உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் உபயோகிக்கும் கிணற்றிலிருந்து, ஹரிஜனங்களும் நீர் எடுத்து உபயோகிக்கிறார்கள்.

குடிதண்ணீர் வசதி

நீலகிரி ஜில்லாவிலுள்ள நாஞ்சநாடு கிராமத்து மக்கள், உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்காக, 50,000 ரூபாயும், ரஸ்தா செப்பனிட 11,000 ரூபாயும், குடிதண்ணீர் வசதிக்காக 6,500 ரூபாயும், தங்கள் பங்காக, அளித்திருக்கிறார்கள்.

தென் ஆற்காடு ஜில்லாவிலுள்ள, பரதூர் கிராமத்தில் சமுதாய மனமகிழ் மன்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. செங்குறிச்சி கிராமத்தில், 12 ஏக்கர் நிலத்தில், சுமார் 550 கனி மரக் கன்றுகள் நடுவதற்காக, ஒரு மாதிரிப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

காற்றிலே மிதந்த கவிதை—(தொடர்ச்சி)

"பயமில்லை ; பலனுண்டு"

'அந்த கணபதிக்கு தொந்தி பெருத்தவிதம்' என்ற இசை.

கேள்வி :—அதிசயமாய்த் தோணுதே அடடாமுதியோர் கல்வி
பதியுமா எங்களுக்குத் தம்பி-தம்பி—நாங்கள்
படிக்க முடியுமோதான் நம்பி—நம்பி.

பதில் :—ஆதிப்புராணமல்ல அலங்காரக் கதையல்ல
சோதித்து பார்த்தாயா கேளும்-கேளும்—நீர்
தொடங்கி முயற்சி செய்து பாரும்—பாரும்.

கேள்வி :—ஏனோ இதில் முயற்சி வீணாக வேலை கெடும்
ஆன நிலபுலன்கள் கொண்டு-கொண்டு—பிழைக்க
அறிவும் அனுபோகமும் உண்டு—உண்டு.

பதில் :—அறிவும்-அனுபவமும் ஆன நிலபுலமும்
சரிவரப் பயன்பட நாளும்-நாளும்—கல்வி
தான்கற்கவேண்டும் இந்தக் காலம்—காலம்.

கேள்வி :—அந்தக் காலத்திலிருந்த அக்பர் சிவாஜி எல்லாரும்
எந்தவிதம் அரசு செய்தார்-செய்தார்—அவர்க்கு
இல்லை படிப்பென்று யார் வைதார்—வைதார்.

பதில் :—அக்பர் சிவாஜி கதை அறிந்த மேதாவியே கேள்
அக்காலம் அவர்நிலை வேறு-வேறு—நமக்கு
அவர்கள்போல் சமர்த்துண்டோ கூறு—கூறு.

கேள்வி :—வேலைவெட்டி யில்லாத விளையாட்டுப் பிள்ளைகளா
வேளை எங்கே படிக்கச் சொல்லு-சொல்லு—எங்கள்
விதிப்படி நடக்கட்டும் தள்ளு—தள்ளு.

பதில் :—விதி விதி யென்று திண்ணை வேதாந்தம் பேசிப் பேசி
மதிப்பைக் குறைக்கலாமோ ஐயா-ஐயா—நாம்
மக்களாய் பிறந்ததும் பொய்யா—பொய்யா.

கேள்வி :—அப்படித்தான் கற்றாலும் எப்படி முடியுமோ
செப்பிடு வித்தையோதான் பாடம்-பாடம்—நாங்கள்
சேரவேண்டுமோ பள்ளிக் கூடம்—கூடம்.

பதில் :—பள்ளிக்கூடமோ வென்று பயந்திடவேண்டா மய்யா
உள்ள யிடத்தில் கொஞ்ச நேரம்-நேரம்—நீங்கள்
உட்கார்ந்து கவனித்தால் போதும்—போதும்.

ஆராய்ச்சி மன்றம்

வீட்டு வசதிபெறுவது எப்படி?

[ஸ்ரீ பாலசுப்ரமணியம், I. A. S., சேலம் கலெக்டர்.]

[இவர் சமுதாய நலத்திட்டத்தில் அனுபவம் பெற்றவர். கீழ்பவானிப் பிரதேசத்தில், சமுதாய அபிவிருத்தி அதிகாரியாய் சேவை செய்தபோது, ஏழை மக்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் துறையில் அதிக கவனம் செலுத்தி, சில புதிய வழிவகைகள் கண்டார். இவருடைய அனுபவத்தை இக் கட்டுரையில் ஆராய்கிருர்.]

அயல் நாட்டிலிருந்து வருகின்ற யாராவது நம் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பார்களேயானல், முதலாவதாக, அவர்கள் கண்ணை உறுத்துவது, நம்முடைய கிராமாந்தரங்களில் உள்ள மண் குடிசைகளும், பாழடைந்த வீடுகளுமே யாகும். நம் நாட்டில் தாண்டவமாடும், தரித்திரம், பிற்போக்கு முதலிய பல்வேறு இழி நிலைகளின் உருவமாக, நம் கிராமக் காட்சிகளுள் ஒரு சில காணப்படுகின்றன. முக்கியமாக, ஹரிஜன மக்கள் வாழும் இடங்கள், மிகவும் கேவலமாயுள்ளன. குப்பையும், கூளமும் நிறைந்த குடிசைகளில், அவர்கள் வாழுகின்றனர்.

இத்தகைய மக்களுக்கு ஓரளவு வசதியான வீடுகள் கட்டிக் கொடுக்கும் பிரச்னையைக் குறித்து, இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. விசேஷமாக, சமுதாயத்தின் அடிதளத்திலுள்ள மக்களுக்கு, சொற்ப செலவில் வீடுகள் அமைத்துத் தரும் திட்டங்களை, பல் வேறு ராஜ்ய அரசாங்கங்கள் ஆராய்ந்து வருகின்றன. இவற்றுள் நம் ராஜ்யத்தில் "கீழ் பவானித்திட்ட பிரதேசத்தில் செய்யப்பட்டுவரும் முயற்சி, ஓரளவுக்கு வெற்றி பெற்றுள்ளது" என்று கூறலாம். அங்கே பரீட்சார்த்தமாக நடைபெற்ற இந்தத் திட்டத்தின் நடைமுறை விவரங்களையும், அதை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய முறைகளையும், இக்கட்டுரையில் விவரமாக ஆராயலாம்.

கிராமங்களில் வீடுகள் கட்ட இரண்டு லட்சம் ரூபாய்

சமூக நலத்திட்டத்திற்காக உள்ள வரவு செலவுத் திட்ட விவரப்பட்டியலில், கிராமாந்தரங்களில் வீடு கட்டுவதற்கென தனிப்பொருள் ஒதுக்கப்படவில்லை. சமுதாய நலத்திட்டத்தின் கீழ், கிராமாந்தரங்களில் வீடுகள் கட்டுவதற்கென, இரண்டு லக்ஷ ரூபாய் ஒதுக்குவதெனத் தீர்மானித்துள்ளனர். கடனுகப் பண உதவி அளிக்கும் திட்டங்களில், இது ஒன்ருகும். சிற்சில பகுதிகளில் மட்டும், சொற்பச் செலவில் எவ்வாறு வீடுகள் கட்ட முடியும் என்பதனை எடுத்துக் காட்டுவதற்கெனவே, இந்த இரண்டு லக்ஷ ரூபாயையும் செலவிடத் தீர்மானித்துள்ளனர். கிராமாந்தரங்களில் உள்ள ஏழை எளியவர்கள், புதிய வீடுகள் கட்டவோ அல்லது தம் பழைய வீடுகளைச் சீர்திருத்தி அமைக்கவோ, ஒவ்வொருவருக்கும் 750 ரூபாய் வரை கடனுகப் பண உதவி அளிப்பதற்கு, ராஜ்ய அரசாங்கத்தார் சட்ட திட்டங்கள் வகுத்துள்ளனர். இவ்விதம், கடனுக அரசாங்கத்திடமிருந்து பண உதவி பெற்றுச் சொற்பச் செலவில் புது வீடுகளைக் கட்டுவதனையும், அல்லது தம்தம் பழைய வீடுகளைச் சீர் திருத்தம் செய்வதனையும் கண்ணுற்று, எல்லா கிராம வாசிகளும், தாமும் அவ்விதம் செய்ய முற்பட வேண்டுமென்பதே, அதன் நோக்கமாகும். கடை நிலை மக்கள் எனக் கூறப்படும் தாழ்த்தப்பட்டோர் நிலைச்குவர, சிக்கனமாக வீடுகள் கட்டி அவர்களுக்கு அளித்து, முடிந்தவரையில் அவர்தம் நிலையினைச் சீர்திருத்த வேண்டுமென்றே, நாம் இந்த சமுதாய நலத்திட்டத்தில் தீர்மானித்துள்ளோம்.

கடனுகப் பண உதவி அளித்தல்

இவ்விதம் கடனுகப் பண உதவி அளிப்பதிலும், சில சங்கடங்களும், கட்டுப்பாடுகளும் இல்லாமலில்லை. முதலாவதாக, பண உதவி பெற்றோர், சுமார் இருபது வருடங்களில் தாம் கடனுகப் பெற்ற தொகையைத் திருப்பி அளிக்க வேண்டும் என்பது, இக்கட்டுப்பாடுகளில் ஒன்ருகும். பொதுவாக,கிராமாந்தரங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் வருவாய் அவர்களின் வயிற்றுப் பாட்டினைக் கழிப்பதற்கு மட்டுமே போதுமானதாயுள்ளது. அவர்களுக்கு எவ்விதமான சேமிப்போ, அல்லது அதிக வருவாயோ இடையாது. சில பருவகாலங்களில் ஏதாவது அதிகப்படியான வருவாய் கிடைத்தாலும், அதனை அவர்கள் சேமித்து வைப்பதில்லை. ஏதாவது ஒரு விசேஷத்திலாவது, வேடிக்கை விநோத கேளிக்கைகளிலாவது அவற்றினைச் செலவிட்டு விடுகின்றனர். இவ்வித நிலையையுடைய மக்களிடமிருந்து, மிகவும் குறைவான இந்த 750 ரூபாயை திருப்பிப் பெற முடியும் என எதிர்பார்ப்பது மிகவும் கடினமான காரியமாகும். எனவே, இக் கஷ்டத்தை நீக்குவதற்கு, இந்தப் பண உதவித் தொகையை 250 ரூபாயாகக் குறைப்பதெனத் தீர்மானித்துள்ளனர். பண உதவி பெறுவோர், இதனை 20 வருடங்களுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

பண உதவி அளிப்பதற்கு, ஜாமீன் பொருளாக, தமக்குச் சொந்தமான சில நில புலன்களைக் காட்ட வேண்டும்.

ஆனால், ஏழை மக்கள் நில புலன்களுக்கு எங்கு செல்வர் ? இப்படி இருக்க, அளித்த பணத்திற்கு ஜாமீனாக எதனைக் கொள்ள முடியும் ? அவர் தாம் பண உதவி பெற்றுக் கட்டிய வீட்டினை, ஜாமீனாகக் கொண்டாலும், அப்பொருள், அரசாங்கம் அளித்த கடன் தொகைக்கு ஈடாகாது. ஜாமீனாகக் கொண்ட வீட்டினை, எளிய மக்கள் வசிக்கும் இடத்தில் விற்றால் அதன் மூலம் கிடைக்கும் தொகை, 750 ரூபாய்க்கும் குறைவாகவே இருக்கும் ; இதற்காகவே, அரசாங்கத்தார், ஏழை மக்களுக்காக அவர்களுக்குத் தெரிந்த பணக்காரர்களின் நம்பிக்கையின் பேரில் பண மளிக்க வேண்டு மென நிர்ணயித்தனர். அதுவும், திருப்திகரமான ஓர் ஏற்பாடாக இல்லை. நில புலன்கள் நிரம்பப்படைத்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களை, மிகவும் தாழ்வாகவே கருதிவருவதால், எளிய மக்களை நம்பி, அவர்களுக்கு ஜாமீன் கொடுக்க மறுத்து விடுகின்றனர். எளியோர்கள் தம்மை நிச்சயமாக ஏமாற்றி விடுவார்கள் என்றும், பணத்தைத் திருப்பி அளிக்கமாட்டார்கள் என்றும், மனதிற்கொண்டு, அவர்களின் சார்பாக ஜாமீன் தர விரும்புவதில்லை. இத்தகைய மனப்பான்மை கொண்ட செல்வர்கள் ஏதோ ஒரு சில சமயங்களில் தான், எளிய மக்களுக்கு ஜாமீன் கொடுக்க சம்மதிக்கின்றனர்.

குறைந்த செலவில் வீடு

தாழ்த்தப்பட்ட எளிய மக்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்கு மற்றவர்களை இணங்கச் செய்வதில் சில கஷ்டங்கள் இருப்பினும், சில நன்மைகளும் உண்டு. கடனாக அளித்த ரூபாய் 250 மிகச் சிறிய தொகையாயினும், இருபது வருடங்களில் கட்டும் அத்தொகையானது, வருடத்திற்கு 18 ரூபாய் விகிதாச்சாரப்படி வருகின்றது. முன்பு கூறியது போல், தாழ்த்தப்பட்ட எளிய மக்கள் தம் சொற்ப வருவாயில் சிக்கனமில்லாமல் வாழ்வதால், வருடத்திற்கு 18 ரூபாய் விகிதாச்சாரப்படி வரும் இச்சிறிய தொகையைக் கூட அவர்கள் கட்ட முடியாமற் போவதை நாம் அறிவோம். மிகுந்த நில புலன்களையுடைய ஒரு சீமானை, நம்பிக்கை தாரராக உடைய ஓர் எளியவனுக்கு, அப் பணம் கட்டுவது அவ்வளவு கடினமாகத் தோன்றாது. ஏனெனில், அந்த எளியோன், நம்பிக்கைதாரரான சீமானின்கீழ் இருப்பதனால், அச்சீமான் எவ்விதத்திலாவது மாதம் ஒன்றுக்கு 1–8–0 கணக்குப்படி வரும் அச்சிறிய தொகையைக் கட்டும்படி செய்து விடுவார். இவ்வித முறை, எவ்விதம் பலனளிக்கும் என்பதனை நடை முறையில் நாம் இனி காணுவோம்.

சுமார் 250 ரூபாய் செலவில் சௌகரியமானதொரு வீட்டைக் கட்டுவதென்பதே மிகவும் கஷ்டமான காரியம். 20 வருஷ கால கெடுவுக்குள், கடனைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமாதலால், கடன் தொகை மூலம் கட்டப்படும் வீடு குறைந்தபட்சம் 20 வருஷ காலமாவது நிலைத்திருக்க வேண்டும். அதாவது, அது நிரந்தர கட்டிட அமைப்பாகவோ அல்லது ஓரளவாவது நிரந்தரமாக இருக்கக் கூடிய அமைப்பாகவோ இருத்தல் வேண்டும். இதன் காரணமாக, வழக்கமாகக் கட்டப்படும் குடிசையை, கடன் தொகை மூலம் கட்டுவதற்கில்லை. மேலும், கூரை வேய்ந்த குடிசைக்கு வருஷா வருஷம் பணம் செலவு செய்து மராமத்து பார்க்கவேண்டியிருப்பதுடன், நெருப்பினால் பாதிக்கப்படுமோ என்ற கவலையும் மனதில் இருந்து கொண்டிருப்பதுண்டு. ஆதலால், இம்மாதிரிப்பட்ட குடிசையைவிட, மேலும் சிறந்ததொரு வீட்டு வசதியை ஹரிஜனங்களுக்குச் செய்து கொடுக்க, திட்டம் இடமளிக்காவிடில், அத்திட்டத்தை நிறைவேற்றுவதால் பலனிருக்காது. ஆகையால், திட்டத்தின் மூலம் கட்ட உத்தேசித்துள்ள வீட்டின் தளம், கழுவி சுத்தம் செய்வதற்குத் தகுந்தவாறு, சிமெண்ட் பூசப்பட்டிருக்கும் ; அதன் கூரை, நல்ல ஓடுகளால் அடுக்கப்பட்டிருக்கும்.

இம்மாதிரியான வீட்டை, மிகவும் குறைந்த செலவில் கட்டுவதெப்படி என்பதே ஒரு பிரச்னையாகும். இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு, ஸ்தலத்திலேயே இலவசமாகவோ மலிவான விலையிலோ கிடைக்கும் பொருள்களை உபயோகித்து, கட்டிடப் பாதுகாப்புக்கும் ஸ்திர அமைப்புக்கும், தகுந்த கட்டுமான வேலைகளைத் தொடங்கி அவசியமற்ற கட்டுமான அமைப்புகளை அகற்றி, வீட்டைக் கட்டி முடிப்பதே தகுந்த வழியாகும். சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில் அலுவல் புரியும் எஞ்சினீயர்களும் இப்பிரச்னையை ஆராய்ந்தார்கள். அநேக யோசனைகளும் அவர்களுக்குக் கூறப்பட்டு, கடைசியில், சென்னை அரசாங்கக் கட்டிட அமைப்பு ஆலோசகரால் உருவாக்கப்பட்டு, தகுந்தவாறு திருத்தப்பட்டதொரு கட்டிட அமைப்பு 'டிஸைன்' உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

கட்டிட அமைப்பு

கல் மலிவாகக் கிடைக்கிறது ; அத்துடன், இப்பிரதேசத்தில் அது எங்கும் கிடைக்கிறது. ஆகவே, கட்டிட அமைப்புக்குக் கற்களை உபயோகிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், கிணறுகள் தோண்டப்படும் இடங்களில் உள்ள கற்களை வெடிவைத்துத் தகர்க்க வேண்டியிருப்பதால், கட்டிடம் கட்டுவதற்குத் தேவைப்படும் கற்களை கிராமவாசிகள் இலவசமாக அளிக்கச் செய்யத் தூண்டுவதற்குச் சாத்தியப்படும் எனக் கருதினோம். மேல் கூரையின் மொத்த எடையையும் தாங்கக்கூடிய வகையில் தளத்தின் மீது, கற்களையும் களிமண்ணையும் கொண்டு தூண்கள் எழுப்பி, அத்தூண்களினிடையே, மண் கொண்டு சுவர்கள் எழுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (இப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய மண், தரம் மிகுந்தது ; இம்மண்ணால் எழுப்பப்படும் சுவர் சீக்கிரம் உலர்ந்து கெட்டித்து விடுவதுடன், நல்ல பாரத்தையும் தாங்கக்கூடியதாகிவிடுகிறது.) மேல் கூரைக்கு, பனைமரக் கட்டைகளையும், காட்டு மரக் கட்டைகளையும் உபயோகிப்பதென முடிவு செய்யப்பட்டது. நாட்டு ஓடுகளையாவது கள்ளிக்கோட்டை ஓடுகளையாவது, அவற்றில் எந்த ஓடுகள் ஸ்தலத்திலேயே மலிவாகக்

கிடைக்கின்றனவோ, அவற்றை, உபயோகிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. சீதோஷ்ண நிலை மாறுதல்களால் தூண்களும் சுவர்களும் பழுதாகாவண்ணம் அவற்றிற்குப் பாதுகாப்பு தர, அவைகளின்மேல் சுண்ணாம்புக் கலவையைப் பூசி, தளத்துக்கு சிமெண்ட் போடுவதென் றும் முடிவாகியது. இவ்வேலைகளுக்கெல்லாம், 500 ரூபாய்க்குக் குறையாது செலவாகுமென மதிப்பிடப் பட்டது.

மக்கள் பங்கு

கடனாக ரூ. 250 மட்டுமே கொடுக்கப்படுமாதலால், எஞ்சியுள்ள செலவுத் தொகையை வேறு வகையில் சரிக்கட்டவேண்டியிருக்கிறது. கடனாக அளிக்கப்படும் தொகை, ஓடு, சிமெண்ட், மரக்கட்டை, முதலியவற்றை வாங்குவதற்கும், கொத்தனார்களுக்கு ஊதியமளிப்ப தற்குமேதான் போதுமானதாக இருக்கும். ஆகையால், வீடு கட்டுவற்கு வேண்டிய இதர சாமான்கள், உழைப்பு ஆகியவை, ஸ்தல மக்கள் அளிக்கும் பங்கு மூலமாகவும், இஷ்டபூர்வ உழைப்பின் மூலமாகவும் பூர்த்தியாக வேண்டியிருக்கிறது. கிராம மக்கள் இலவசமாகக் கற்களை யும், மண்ணையும் கொடுத்து, கட்டுமான வேலை நடக்கு மிடத்துக்கு அவைகளைத் தங்கள் வண்டிகளிலேயே எடுத்துச் சென்று உதவி புரிவதுடன், ஒவ்வொரு ஹரிஜன குடும்பத்துக்கும் இரண்டு பனை மரங்கள் வீதம் கொடுத் தால் (பனைவெல்ல உற்பத்திக்குப் பிரயோசனப்படாத பனை மரங்களை, வீடு கட்ட உபயோகப்படுத்தப்படும்).... மேலும், இலவசமாகவோ அல்லது குறைந்த ஊதியம் பெற்றோ ஹரிஜன மக்கள் வீடு கட்டுவதற்காக உழைக்க முன்வந்தால், கடனாக அளிக்கப்படும் தொகை மூலம் இம் மாதிரியான வீடுகளைக் கட்டுவது சாத்தியம் என்று நாங்கள் கருதினோம்.

இத்திட்டத்துக்கு ஆதரவு தேட, பல்வேறு கிராமங் களுக்கு நாங்கள் சென்றோம். அநேக கிராமங்களில், பண வசதி அதிகமாக உள்ள விவசாயிகள், பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். ஹரிஜனங்களுக்கு நல்ல வீடு களைக் கட்டிக்கொடுப்பது அரசினர் பொறுப்பென்றும், மேலும், இலவசமாக அவர்களிடமிருந்து உழைப்பை எதிர் பார்க்கமுடியாதென்றும், அவர்களால் இலவசமாக உழைப்பை அளிக்கவும் இயலாதென்றும் சில கிராமங் களில் உள்ள ஹரிஜனங்கள் எண்ணினார்கள். குறைந்தது ஒரு கிராமத்திலாவது இத்திட்டத்தைப் பரீட்சார்த்தமாக நிறைவேற்றிவிட வேண்டுமென்று மிகவும் அவாவுற்றோம். ஏனெனில், திட்டம் நன்றாக நிறைவேறும் என்று நாங்கள் கருதினோம். மேலும், இம்மாதிரியாக வீடுகளைக் கட்டலாம் என்று மக்கள் உணர்ந்துவிட்டால், மக்களே அதிக எண்ணிக்கையில் முன்வந்து திட்டத்தை நிறைவேற்ற முற் படுவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. அதிருஷ்டவச மாக, திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுகாவி லிருக்கும் மோஞ்சனூர் கிராமத்தைச் சேர்ந்த பொதுநல ஊழியர், ஸ்ரீ முத்துசாமி கவுண்டரின் ஒத்துழைப்பை நாங்கள் பெற்றோம். ஹரிஜன மக்களுடைய நாணயத்தின் மீது இவருக்கு அபார நம்பிக்கை. ஆதலால், இவர் அவர்களுக்குப் பிணையாக நிற்பதற்கு முன்வந்ததோடல் லாது, வீடுகளைக் கட்டும்போது மேற்பார்வையிடும் சிரமமான வேலையையும் ஏற்றுக்கொண்டார்.

புதிய காலனி

சர்க்கார் நிலத்தின் சிறந்ததொரு பகுதி, ... இது வீடுகளைக் கட்டுவதற்குத் தகுந்த மனை .... தேர்ந்தெடுக் கப்பட்டது. இந்நிலம், பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு, வீடு கட்டுவதற்குரிய வரைபடமும் தயாரிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட ஹரிஜனங்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, அவர்களுக்கு காலி மனைகள் வழங்கப்பட்டன. ஸ்ரீ முத்து சுவாமி கவுண்டரின் முயற்சியால், கிராம மக்களிடமிருந்து, கற்கள், மண், பனை மரங்கள் முதலியவை ஹரிஜனங் களுக்கு இலவசமாகக் கிடைத்தன. ஹரிஜனங்களோ, நாளொன்றுக்குக் குறைந்த விகிதமாக பத்தணா ஊதியம் பெற்று, சுமார் இரண்டு மாத காலத்துக்கு, உழைத்தனர். இவ்வாறாக, மோஞ்சனூர் கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி பாளையம் என்ற குக்கிராமத்தில் 16 வீடுகள் கொண்ட தொரு புது காலனி உருவாகியது.

சென்னை அரசாங்க விவசாய, சமுதாய அபிவிருத்தி அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம், 1954-ம் ஆண்டு நவம்பர் மீ 28உ யன்று, புதிய காலனி உருவாக, அஸ்திவாரக்கல் நாட்டினார். காலனி உருவானதும், சென்னை அரசாங்க முதல் அமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ நாடார், 1955-ம் ஆண்டு பிப்ரவரி மீ 3உ யன்று, அதைத் திறந்து வைத்தார். ஸ்ரீ முத்துசுவாமியின் சலியாத உழைப்பின் காரணமாக வும், இடைவிடாது அவர் முயற்சித்து வந்ததாலும், இரண்டு மாத காலத்துக்குள், காலனி உருவாகிவிட்டது.

திட்டம் நிறைவேற தூண்டுதல்

ஒரு காலனி, திட்டமிட்டபடி, இவ்வாறாக உருவானது, மற்ற கிராமங்கள் பலவற்றில், இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்ற அக் கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தூண்டு கோலாக விளங்கி வருகிறது என்பதை அறிந்து நாங்கள் மகிழ்ச்சியுறுகிறோம். இம்மாதிரிப்பட்ட காலனிகள் பலவற்றை நாங்கள், இத் திட்டத்தின் கீழ், உருவாக்கி வருகிறோம். இப் பிரதேசத்தில் வதியும் ஹரிஜனங்களின் நிலையை உயர்த்துவதற்கு எங்களாலான பணியைப் புரி வதில் உவகை கொள்கிறோம்.

❖❖❖❖❖

எங்கள் அனுபவம்:

நெல் மகசூல் போட்டிப் பரிசு பெற்றவர் தம் அனுபவத்தை எடுத்துக் கூறுகிறார்:

நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் முறைகளில், நெல் மகசூல் போட்டியும் ஒன்று. அத் திட்டத்தின்படி 1954-55-ம் வருஷத்தில் நன்னிலம் தாலுகா பூங்குளத்தைச் சேர்ந்த ஸ்ரீ வி. ஆர். கோபாலய்யருக்கு பிர்க்கா பரிசு வழங்கப்பட்டுள்ளது. தமது நிலத்தில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு அவர் கையாண்ட முறைகளையும் தமது அனுபவத்தையும் அவர் கீழ்க்கண்டவாறு விவரிக்கிறார் :—

"நான் கடந்த சுமார் 15 வருஷ காலமாக விவசாய இலாகாவினரின் யோசனைப்படி சாகுபடி செய்து வருகிறேன். என்னுடைய நிலங்களில் இந்த பதினைந்து வருஷங்களுக்கு முன் நான் சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 24 கலம் நெல்தான் கண்டு முதல் செய்து வந்தேன். ஆனால் தற்போது விவசாய இலாகாவினர் சிபார்சுப்படி பசுந்தாள் உரம் பயிர் செய்து உரமிட்டும், ரசாயன உரங்களை மண்ணின் வளத்துக்குத் தக்கபடி உபயோகித்தும், சிக்கன முறையில் பொறுக்கு விதை விதைத்தும் நடவு செய்து வந்ததில் வருஷத்துக்கு வருஷம் எனக்கு மகசூல் கூடி வந்திருக்கிறது. இப்பொழுது முன்னிருந்ததைப் போல் இரு மடங்கும் சில விடங்களில் மூன்று மடங்குக்கு மேலும் கிடைத்திருக்கிறது. 1954-55-ல் நெல் மகசூல் பரிசுப்போட்டியில் என் நிலத்தில் ஏக்கருக்கு 5,695 பவுண்டு நெல் மகசூல் கிடைத்து நன்னிலம் பிர்க்கா பரிசு பெற்றேன்.



கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் மக்கள் காட்டும் ஆர்வம்

நான் கையாண்டு வருவது திருத்தப்பட்ட ஜப்பானிய முறை சாகுபடி. பத்து சென்டு நாற்றங்கால் செப்பனிட, அதற்குத் தொழு உரம் ஒரு டன், பொறுக்கு விதை செஸ்பேனியா 21 பவுண்டு உபயோகிக்கவும், பிறகு ஒரு ஏக்கர் நிலத்துக்கு பசுந்தழை செஸ்பேனியா விதை, சூப்பர் பாஸ்பேட் 2 மூட்டை, தொழு உரம் 6 டன், அமோனியம் சல்பேட் 15 பவுண்டு, ஆகியவை போடவும், உழவு, நடவு, களையெடுப்பு, அறுவடை இவற்றிற்குமாக மொத்தம் எனக்கு, ரூ. 136-1-6 செலவாயிற்று. ரூ. 575 பெறுமான 92 கலம் நெல்லும் ரூ. 40 மதிப்புள்ள 80 கட்டு வைக்கோலும் கிடைத்தது. எனவே எனக்கு நிகர லாபம் ரூ. 438-14-6.

திருத்தப்பட்ட ஜப்பானிய முறைப்படி இலாகாவினர் சென்டுக்கு 3 பவுண்டு விதைக்கச் சிபாரிசு செய்தார்கள். நாற்றங்கால் நல்ல வளமுள்ளதாகையால் நான் சென்டுக்கு 2 பவுண்டு தான் விதைத்தேன். நாற்றை நுனி விரலால் வேருக்கு அடியில் கைகொடுத்துப் பிடுங்கச் செய்து, நாற்று முளையில் சேறு போக அடிக்காமல், ஒரு அலகு நாத்து நடச் செய்தேன். என்னுடைய அனுபவத்திலிருந்து ஒவ்வொரு விவசாயியும் விவசாய இலாகாவினரை அணுகி அவர்கள் யோசனைப்படி நடந்து பயனடைவது நாட்டிற்கே சேவை செய்வதாகும்."

பரிசு பெற்ற மற்றொருவர் கூறுவதாவது

விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் நடத்தப்படும் நெல் மகசூல் போட்டியில் 1954–55-ம் ஆண்டு நன்னிலம் தாலுகா திருமருகல் பிர்க்கா பரிசு ஸ்ரீ மு. நாராயணசாமி முதலியாருக்கு வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக அவர் கடைப்பிடித்த முறைகளைக் கீழே விவரிக்கிறார் :—

"எனக்கு சுமார் 20 ஏக்கர் நிலமிருக்கிறது. இதில் நெடுநாளாக ஏக்கருக்கு அதிக பட்சம் 45 கலம் நெல் வரை தான் மகசூல் கிடைத்து வந்தது. ஆனால் சில வருஷங்களாய் நான் விவசாய இலாகா சிப்பந்திகளை அணுகி அவர்கள் யோசனைப்படி காலா காலத்தில் உரமிடுதல், சிக்கன முறையில் நாற்றுநடுதல், பசுந்தாள் எருப்பயிரான, கொளுஞ்சி, செஸ்பேனியா முதலியவற்றை உபயோகித்தல் முதலிய முறைகளைக் கையாண்டதின் பலனாக என் நிலத்தில் மகசூல் அதிகரித்து வந்தது. 1954-55-ல் நடை பெற்ற நெல் மகசூல் போட்டியில் கலந்து கொண்டு மிகவும் ஊக்கத்துடன் பயிர் செய்து, விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர், பீல்டுமென் மற்றும் பல விவசாயிகள் இவர்கள் முன்னிலையில் கண்டு முதல் செய்ததில் என் நிலத்தில் ஏக்கருக்கு 4,300 பவுண்டு அதாவது 72 கலம் நெல் கிடைத்தது.

பன்னிரெண்டு சென்ட் நாற்றங்கால் செப்பனிட்டேன். அதற்கு தொழு உரம் 10 டன், சூப்பர்பாஸ்பேட் 112 பவுண்டு மற்றும் செஸ்பேனியா, பூவரசு முதலிய பசுந்தழைகளையும் உபயோகித்தேன். பொறுக்கு விதை 7 மரக்கால் விதைக்கப்பட்டது. பிறகு நிலத்தை நன்கு உழ, தழை அமுக்க, சட்டன் உழ, நாற்று பறிக்க, நடவு நட, 80 பவுண்டு அமோனியம் சல்பேட் இரண்டு தடவையாகப் போட, களையெடுக்க, அறுவடை செய்ய, முதலிய பல கட்ட வேலைகளுக்குமாகச் சேர்த்து மொத்தம் ரூ. 135 செலவு செய்தேன். இந்த முயற்சிகளின் பலனாக ரூ. 450 மதிப்புள்ள 72 கலம் நெல்லும், ரூ. 36 மதிப்புள்ள 72 கட்டு வைக்கோலும் கிடைத்தன. எனக்கு கிடைத்த நிகர லாபம் ரூ. 351.

சென்னை ராஜ்ய சமூக சேவை மகாநாடு

சென்னை ராஜ்ய சமூக சேவை ஏழாவது வருடாந்திர மகாநாடு, 1955 அக்டோபர் 7-ந்தேதியன்று, கோழிக்கோடில் நடைபெற்றது. 150 பிரதிநிதிகள் அம்மகாநாட்டிற்கு வந்திருந்தனர்.

கிராமப் புறங்களில் க்ஷேம நலத் திட்டங்கள் ; பழங்குடி மக்கள், பிற்பட்ட வகுப்பினர் நலன் ; சமூக நலன்பற்றி தற்போது எழுந்துள்ள பிரச்னைகள் ஆகியவைப்பற்றிப் பரிசீலிக்க மூன்று பகுதிகள் இருந்தன. அவை தவிர, (1) தேசிய குழந்தை பராமரிப்பு முறை ; (2) சமூக நலனுக்கென பிரத்தியேக அரசாங்க இலாகா ; (3) அவசர நிவாரணம் ஆகியவைபற்றி விவாதிக்க உப-கமிட்டிகளும் அமைக்கப்பட்டன.

சமூக நலனுக்கென அரசாங்க இலாகா ஏற்படுத்துவதைப் பற்றி பரிசீலிக்கும் உப-கமிட்டி அக்டோபர் 8-ந் தேதியன்று டாக்டர் யு. கிருஷ்ண ராவ் தலைமையில் கூடியது. டாக்டர் ஸ்ரீமதி எ. ஜயலக்ஷ்மி ராவ் (மாதர் நல இலாகா டைரக்டர்) இந்த உப-கமிட்டியின் காரியதரிசியாக இருந்தார். கமிட்டிக் கூட்டத்தில் நடந்த விவாதத்தில், ஸ்ரீ கே. வி. ஸ்ரீதரனும் (சென்னை சமூக சேவைப்பள்ளி டைரக்டர்) ஸ்ரீமதி சி. அனுசூயா தேவியும் (ஆந்திர ராஜ்ய மாதர் நல இலாகா டைரக்டர்) ஸ்ரீமதி ஷாந்தேரி பிரபுவும், ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரியும் (சமுதாய அபிவிருத்தி டைரக்டர்) கலந்து கொண்டார்கள்.

உப-கமிட்டி எந்த விஷயத்தைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்பதைப்பற்றி டாக்டர் கிருஷ்ண ராவ் விளக்கிக் கூறினார்.

" சமூக நலனைக் கவனிக்க புது இலாகா உருவாகவேண்டும். சமூக சேவைபற்றி புள்ளி விவர சேகரிப்பு, ஆராய்ச்சி ஆகியவை அந்த இலாகா கவனிக்க வேண்டிய அலுவல்களில் முக்கியமானவையாகும். புது இலாகா உருவானதும், தற்போது பல்வேறு இலாகாக்கள் சமூக நலனைப்பற்றிக் கவனித்து வரும் வேலைகளை, அப்புது இலாகாவின் பொறுப்பில் விட்டுவிடவேண்டும் " என, கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீ ஸ்ரீதரன் கூறினார்.

ஸ்ரீ என். இ. எஸ். ராகவாச்சாரி தனி இலாகா வேண்டும் என்று கோரியதை ஆதரித்தார். ஆனபோதிலும், எந்த இலாகாவும் எல்லா அலுவல்களையுமே கவனிப்பதற்குரிய முழு அமைப்பாக இருக்காதென்றும், பொது நலம் பற்றிய பல்வேறு அம்சங்களைக் கவனிக்கும் இதர இலாகாக்களுடன் இணக்கமாக ஒத்துழைத்தாக வேண்டியது அவசியமென்றும் அவர் எடுத்துக்கூறினார். சமூக நலனுக்கெனத் தனி இலாகா உருவானால், நல்ல பலன்களை அளிக்கக்

விபரீத வியாக்கியானம்

" கிராம சேவக் அபிவிருத்தி கமிஷனராக முடியும் " என்று அதிகாரி ஒருவர் சொன்னதாகப் பத்திரிகையில் படித்த கிராம சேவக், அந்தக் கணத்திலேயே, தாம் அபிவிருத்தி கமிஷனராக ஆகிவிட்டதாய் நினைத்துக்கொள்கிறார்......நடந்தும் காண்பிக்கிறார்.

கூடிய வகையில் இன்னும் மேற்கொண்டும் கூடுதலாகப் பல பணிகளைப் புரிய முடியும் என்று அவர் குறிப்பிட்டார். பல்வேறு பகுதிகளில் அரசினரால் நடத்தப்பட்டுவரும் சமூக நல வேலைகளை ஒருங்குபடுத்த, செக்ரடேரியட் காரியாலயத்தில் ஏற்கனவே முயற்சிகள் நடந்து வருகின்றன வென்றும், மேற்கொண்டும் மக்களுக்கு நல்ல பலன்களை அளிப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கும் இம் முயற்சிகளில் வெற்றி காண, புது இலாகாவின் சிருஷ்டி பெரிதும் உதவி புரியவேண்டும் என்றும் அவர் கூறினார். ஆனபோதிலும், இது, தனிப்பட்டவர்கள் சமூக சேவை மீது கொண்டுள்ள ஆர்வத்தைக் குறைத்துவிடக்கூடிய வகையில் இருக்கக் கூடாது என்று அவர் எச்சரித்தார்.

சமூக நலனுக்கெனத் தனி அமைச்சு அமைப்பது என்ற யோசனை ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. தனிப்பட்டவரின் சமூக சேவைக்கோ, இஷ்ட பூர்வ ஸ்தாபனங்களின் சேவைக்கோ, புது அமைச்சு ஏற்படுவதால், இனி இடமிருக்காது என்று எண்ணவேண்டியதில்லை. இஷ்ட பூர்வ ஸ்தாபனங்கள் அரசினரிடமிருந்து பண உதவி பெற்று, தங்கள் சேவையைத் தொடர்ந்து புரிவதற்குரிய புதிய திட்டமொன்றை வகுக்கவேண்டும். உத்தியோகஸ்தர்களும், உத்தியோகச் சார்பற்ற தொண்டர்களும் ஒன்று சேர்த்து உருவாக்கும் மத்திய ஸ்தாபனமாக, இது விளங்க வேண்டும். சமூக நலனுக்காகப் பாடுபடும் அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் இஷ்ட பூர்வ ஸ்தாபனங்களுக்குமிடையே, ஒவ்வொரு கட்டத்திலும், ஒருங்குபாடு இருக்க வேண்டும்.

சமூக சேவைத் தொண்டர்களுக்குப் பயிற்சி

சமூகசேவைத் தொண்டர்களுக்குப் பயிற்சி மிகவும் அவசியம். பயிற்சிக் காலத்தில், ஒரு குறுகிய கால அளவுக்கு களவேலையில் போதுமான பயிற்சியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். மத்திய ஸ்தாபனத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற எல்லா கட்டங்களிலும், பயிற்சி பெற்ற சேவைத் தொண்டர்களே அலுவல்களைக் கவனித்து வர ஏற்பாடு செய்யவேண்டும்.

சமூக சேவைத் தொண்டர்கள் தேர்வு

அரசினராலோ அல்லது இஷ்ட பூர்வ ஸ்தாபனங்களோ வகுக்கப்படும் திட்ட வேலைகளை நிறைவேற்ற, பயிற்சி பெற்ற சமூக சேவைத் தொண்டர்களையும், சமூகப் பணியில் ஆர்வ மிகுந்தவர்களையும் மட்டுமே, தேர்ந்தெடுக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டது. சமூகப் பணிக்கென சில குறிப்பிட்ட தர நிர்ணயங்கள் வரையறுக்கப்படவேண்டும். ஒரே வட்டாரத்தில், ஒரே வேலையை மறுபடியும் வீணாகச் செய்வதைத் தவிர்க்க வேண்டும். அநேக இஷ்ட பூர்வ ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்ற தொண்டர்கள் இல்லையென்றும், தகுந்த பயிற்சி பெற்ற தொண்டர்கள் அந்த ஸ்தாபனங்களில் சேர்ந்து தொண்டு புரிய ஏற்பாடு செய்ய வேண்டுமெனறும் கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

கிராமப்புறங்களில் க்ஷேம நலத் திட்டங்கள்

சென்னை கவர்னர் ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா, 1955-ம் ஆண்டு அக்டோபர் மீ 8உயன்று, மகாநாட்டின் முதல் பகுதிக் கூட்டத்தில் பேசும்போது, "வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் சில சௌகரிய வசதிகள் நகரங்களில் வாழும் மக்களுக்கு மிகவும் எளிதாகக் கிடைத்து விடுகின்றன; ஆனால் அவை, நம் நாட்டில், கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்குக் கிட்டுவதில்லை. ஆகவே, கிராமப்புறங்களில் சமூகப் பணியாற்றுவதற்கு மிகுந்த வாய்ப்பு உண்டு" என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"கிராமங்களில் வீட்டு வசதி அளிப்பது ஒரு பிரச்சனையாக விளங்குகிறது. சுத்தமில்லாத இடங்களில், மக்கள் அதிகக் கணக்கில் குழுமி வாழ்கிறார்கள். சுற்றுப்புற இடங்களும் வீடுகளும் துப்புரவாக இருக்கவேண்டுமானால், மக்கள் ஆரோக்கிய வாழ்வில் ஆர்வம் கொள்ளச்செய்வதோடு, அவர்கள் நல்ல பழக்க வழக்கங்களை அனுஷ்டிக்கும்படி ஊக்குவிக்கவேண்டும். பொதுவாக, கிராமப்புறங்களிலுள்ள சிறுவர்கள் அழுக்குப் படிந்த மேனியுடன், காணப்படுகிறார்கள். சுகாதார முறைகளை அனுசரித்து, தாமிருக்கும் இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டியதும், தம்முடைய ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்வதும் மிக அவசியமாகும். கிராம மக்கள் மனதில் நம்பிக்கையை யூட்டி அதன்மூலம், பிறரைச் சார்ந்தே வாழவேண்டும் என்ற மனப்பான்மையை அகற்றி, தங்களுடைய சொந்த முயற்சியாலேயே மேற்கொண்டும் சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு, அவர்கள் மனதிலே புதியதொரு உற்சாகத்தையும் உண்டாக்குவதே, சமூக சேவையின் குறிக்கோளாகவிருக்க வேண்டும். இதில் வெற்றிகாணவேண்டுமானால், கிராமப்புறங்களில் பணிபுரிய விரும்பும் சமூக சேவைத் தொண்டர்கள் மிகவும் பணிவுடன் நடந்துகொள்ளவேண்டும். அந்தரங்க சுத்தியாக பாடுபட வேண்டும். தாங்கள் சிறந்த வகையில் பணிபுரிய, ஸ்தாபனங்களைப் பற்றியும் மக்களைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்வதற்கு உதவி புரியும் பயிற்சியையும் போதுமான அளவில் அவர்கள் பெறவேண்டும். நம் நாட்டில், மிக அதிக எண்ணிக்கையிலுள்ள கிராம மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்படும் சமுதாய நலத்திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள், மற்றும் இதர அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை, நம் நாட்டின் மகத்தான திட்டங்களாகும்." கவர்னரின் உரைக்குப்பின், நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமண்யத்தின் தலைமையின்கீழ் கூட்டம் மீண்டும் நடைபெற்றது.

அப்போது, சமூகக் கல்வியின் அவசியத்தைப் பற்றி, ஸ்ரீ பி. கே. நம்பியார், வற்புறுத்தினார். க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்களை அதிக எண்ணிக்கையில நிறைவேற்றி, ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அவற்றின் மூலம் பலன்பெறச் செய்யவேண்டுமென அவர் யோசனை கூறினார்.

அவள் ஆவல் ; அவர் கவலை

முதியோர் கல்வி நிலையத்தில் படிக்க வந்திருந்த தமது மனைவியை அவசரமாக வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார் வீராசாமி. போகும்போது, அவர் தனக்குத்தானே "வேண்டாம் என்று யார் சொல்லமுடியும்......பெரியவங்களுக்குப் படிப்பாம்,...ஆனால், எனக்குப் பசிக்குது......கஞ்சி காய்ச்சரது யாராம் ?"

மாதர் சங்கங்களின் தொண்டு

பல இடங்களில் சமுதாய அபிவிருத்தி திட்டங்கள் எங்ஙனம் நிறைவேற்றப்பட்டு வருகின்றனவென்பதைப் பற்றியும், அபிவிருத்தி வட்டாரங்களிலுள்ள மக்கள், திட்டஅமலின் பயனாக, எங்ஙனம் மாறி வருகிறார்கள் என்பதைப்பற்றியும், இத்தகைய நல்ல மாறுதல்களை முதன் முதலாக உண்டாக்குவதற்குக் காரணமாக விருக்கும் திட்டங்களின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பல மாதர் சங்கங்கள் எந்தெந்த வகையில் பணியாற்றி வருகின்றனவென்பதைப் பற்றியும் ஸ்ரீ என்.இ. எஸ். ராகவாசாரி விவரித்தார்.

பிரதிநிதிகள் விவரித்த விஷயங்களிலுள்ள முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக, தலைவர் எடுத்துக்கூறிவிட்டு, கிராம மக்கள் தங்களுடைய சொந்த முயற்சிகளாலேயே, தாங்கள் மேற்கொண்டும்சிறந்த வகையில் வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற உணர்ச்சியை கிராம மக்கள் மனதில் உண்டாக்கி ஊக்குவிப்பதே, க்ஷேமநலத் திட்டங்களின் அடிப்படைக் கொள்கையாக இருக்கவேண்டுமென்று கூறினார். இது விஷயத்தில், கிராமத் தொண்டர் பயிற்சி முக்கியமானதாக விளங்குகிறது என்று, அவர், குறிப்பிட்டார். அவருடைய உரைக்குப் பின்பு, விவாதம் நடைபெற்றது. பிரதிநிதிகளில் அநேகர், அவ்விவாதத்தில் கலந்து கொண்டனர். பயிற்சியைப் பற்றி அநேகர் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். சமூக நலனுக்காகப் பாடுபட விரும்புகிறவர்கள், தகுந்த பயிற்சி பெறவேண்டியது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் ஆமோதித்தார்கள்

சில யோசனைகள்

கிராமங்களில் சமூக சேவை புரியச் செல்ல விருக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டுமென ஸ்ரீ அப்ஸலாம் கூறினார்.

புள்ளிவிவரங்கள் சேகரித்து, போதுமான தொண்டர்களைத் திரட்டிப் பயிற்சி அளிக்கலாம் என்று ஸ்ரீமதி லீலா தாமோதர மேனன் யோசனை கூறினார். கிராமங்களில் வீட்டு வசதி அளிப்பது சம்பந்தமான பிரச்னையை அரசினர் உடனடியாகக் கவனிக்கவேண்டு மென யோசனை கூறப்பட்டது. பிறகு, தலைவர், கீழ்க்கண்ட யோசனைகளைக் கூறினார் :—

1. மன்றங்கள், சங்கங்கள், கிளப்கள் போன்ற ஸ்தாபனங்களை கிராமங்களில் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

2. கிராமங்களில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, ஆக்க வேலைகளை அவர்களே தலைமை தாங்கி நடத்துவதற்குத் தகுந்த பயிற்சியை அவர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

3. சரிவர நடக்காத கிராமப் பள்ளிக்கூடங்களை மேற் பார்வையிடுவதற்கு, உத்தியோகச் சார்பற்றவர்களின் சேவையைப் பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

கிராமத் திருப்பணி ஆரம்பம்

தென்னாட்டின் சீர்திருத்த வாதிகளுள் தலை சிறந்தவர் ஸ்ரீராமானுஜர். தீண்டப்படாதவர் என்று பழங்கால சமூகம் ஒதுக்கியிருந்தவர்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்துவைத்த பெருமை அவரையே சாரும். இன்று நேற்றல்ல சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே, சமுதாயத்திற்குக் களங்கமாக இருந்து வந்த தீண்டாமை பிரச்னையைத் தீர்க்க முனைந்த துணிச்சலும், கருணையும் அவருக்கிருந்தன.

அந்த மகான் பிறந்த ஊரான ஸ்ரீபெரும்பூதூரில் அக்டோபர் மாதம் முதல் தேதி யன்று, சமுதாய அபிவிருத்திக்கான கிராமத் திருப்பணி வெகு விமரிசையோடு ஆரம்பித்துவைக்கப்பட்டது. "மக்கள் சேவையே, மாதவன் சேவை" என்ற கொள்கையை உலகறியச் செய்த 'உடையவர்' கோயிலின் முன்னே உள்ள மண்டபத்தில், சமுதாய வளர்ச்சிக்குத் துணை செய்யும் பல்வேறு இலாகாக்களின் வேலை விபரங்களை விளக்கும் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரளான மக்கள் கூடியிருந்து அந்த விழாவைச் சிறப்பித்தனர். ஜில்லா அதிகாரிகள் அனைவரும் வந்திருந்தனர்.

இந்த விழாவின் முக்கிய சிறப்பு, பல புதிய வேலைகள் உடனடியாகத் தொடங்கட் பட்டதுதான். இந்த வகையில் ஜில்லா கலெக்டர் ஸ்ரீ A. வெங்கடேசன், I.A.S. அவர்கள் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருந்தது மிகவும் பாராட்டத்தக்கது.

ஸ்ரீ பெரும்பூதூரில் ஹரிஜன சேரி ஒன்றில் ரஸ்தா அமைக்கும் வேலையை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் ஆரம்பித்துவைத்து, ஏழை மக்கள், அபிவிருத்தி வேலைகளில் எல்லோரையும் விட அதிக உற்சாகமாக ஈடுபடுவதைப் பாராட்டிப் பேசினார். அங்கிருந்து சுங்குவார்சத்திரம், மதிரிமங்கலம், கீழ்பொடையூர், ஏகனபுரம், மணிமங்கலம் முதலிய ஊர்களில் பலவேலைகள் தொடங்கப்பட்டன. சட்டசபை அங்கத்தினர்கள், ஜில்லா போர்டு தலைவர், அங்கத்தினர்கள் முதலியோர் இதில் பங்கு கொண்டனர். அங்கங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண் காட்சிகள், குழந்தைகளின் கும்மி, கோலாட்டம் முதலியன விழாவிற்கு மெருகளித்தன. மதிரிமங்கலத்தில், குழந்தைகள் கொடிதாங்கி அணி வகுத்து வரவேற்பளித்த காட்சி குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொரு ஊரிலும் சிறப்பான முறையில் விழா ஏற்பாடுகள் செய்திருந்தனர். தாமரைப்பூ தோரணங்கள் கவர்ச்சிகரமாய் இருந்தன. அன்று மாலை, மணிமங்கலம் என்ற ஊரில் அமைச்சர் தலைமையில் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அங்கே பல வேலைகள் தொடங்கப்பட்டன.



ஸ்ரீபெரும்பூதூர் விழாவின் எதிரொலியாக ஒரு சிறந்த பலன் உடனடியாக ஏற்பட்டதை இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இத்தாலூகாவைச் சேர்ந்த மாத்தூர் என்ற இடத்தில் 'கிஸான்' தகராறு இருந்ததும், அதனால் அந்தக் கிராமத்தில் விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டிருந்ததும், பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியாகும். பல நாட்களாக, இந்த விவகாரம் தீர்க்கப்படாமல் இருந்தது. கிராமத் திருப்பணி ஆரம்ப விழாவின் பயனாக, இந்த விவகாரம், சுமுகமாக தீர்க்கப்பட்டது. விழா நடைபெற்ற அன்றே, ஜில்லா கலெக்டர், ரெவினியு டிவிஷனல் ஆபிஸர், மற்ற முக்கிய பிரமுகர்கள் இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட இரு தரப்பாருடனும் கலந்து பேசி, ஒருவாறு சமரசம் செய்து வைத்தனர். அக்டோபர் மூன்றும் தேதி ரெவினியு அமைச்சர் ஸ்ரீ மாணிக்கவேலு அவர்கள் அங்கே விஜயம் செய்து இந்த சமரச ஏற்பாட்டை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து வைத்து ஒற்றுமையை நிலைநாட்டினார்.

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Community Development, Government of Madras.

CONNEMARA PUBLIC LIBRARY
27 OCT 1956